உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

ஆறாந்தொகுதி.

பத்திராசிரியர்—மு. இராகவையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1907—1908

உ

“செந்தமிழ்” அருந்தொகுதியின்

உள்ளுறை

—:o:—

அடக்கம்:—ஸ்ரீமத்-ம. வெ. சிவசுப்பிரமணியஐயர். ௧௯௪.

அபிப்பிராயபேதம்:—“ஜநவிநோதினி.” ௨௯௪.

அறஞ்செயல்:—ஸ்ரீமத்-பி. எஸ். சுப்பிரமணியஐயர். ௩௭௩.

ஆத்மவிசாரணை:—ஸ்ரீமத்-ஜோஸப்டையாஸ். ௫௧௬.

ஆலஞ்சேரி அயிந்தன்:—பத்திராசிரியர். ௫௮௭.

‘ஆழிவடிம்பலம்பநின்றனும்” என்னும் நளவெண்பாப் பாட்டுரை: } பத்திராசிரியர். ௨௫௩.

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர்.
[௬௭, ௧௧௮, ௨௩௭, ௪௨௬, ௫௪௧.

இறையனாரகப்பொருளுரை:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A.
[௫௫.

ஊழும் முயற்சியும்:—ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயர். ௫௬௫.

ஏகம்பவாணன்:—பத்திராசிரியர். ௨.

ஒருகம்பசூத்திரம்:—ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார். M. A.
[௩௨௬.

ஒற்றுமை:—ஸ்ரீமத்-ஜோஸப் டையாஸ். ௬௧0.

ஓர் குறிப்பு:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A. ௪௩௨.

ஔவையார் நீதிமொழி உரைமயக்கம்:— } ஸ்ரீமத்-மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை, B. A., L. T., ௩௫௧.

கடைச்சங்கவாராய்ச்சி:—பத்திராசிரியர். ௫௮௩.

கப்பற்கோவை:—பத்திராசிரியர். ௩௧௭.

கம்பராமாயணம்:—ஸ்ரீமத்-அ. க. வைத்தியலிங்கஉபாத்தியாயர். ௧௨௬

கல்லாடம்:—ஸ்ரீமத். ஜி. சதாசிவம்பிள்ளை. ௧௨௨.

கல்லாடர்.—ஸ்ரீமத்-அ. க. வைத்தியநாத தேசிகர். ௫௨௬.

கற்பு:—ஸ்ரீமத்-M. K. M. அப்துல்காதிறு ராவுத்தர். உஅகூ, ௱ருச, [சகசு.

காலமளக்குங்கருவிகள்; —பத்திராசிரியர். கள௱.

கோபமும் அதனாலாகிய தீமைகளும்:—"ஜகவிநோதினி" சரு

சாதுரியவசனங்கள்:—ஸ்ரீமத்-மு. ரா. அருணாசலக்கவிராயர். ௯க

சாதுரியவசனங்கள்:—ஸ்ரீமத். என். சேதுராமையர். எஎ

சாந்துப்புலவர்வரலாறு:—ஸ்ரீமத். சர்க்கரை - இராமசாமி. [உசூசூ, ௱சூரு, ௱

சில பழைய பாட்டுக்களும் அவைகளின் காலமும்:— ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ், M.

சீவகசிந்தாமணியுரை:—ஸ்ரீமத்-சதாசிவஐயர். உ௱௦.

"செந்தமிழின்" ஆறுவதாண்டு:—பத்திராசிரியர். க.

சென்னைப் பூர்வகலாப்பிரசங்க நிகேதனத்தில் ஓர் உபந்நியாசம்:— ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியார். M. A. உஅ௦.

குஞ்சைவாணன்கோவையுரை:—ஸ்ரீமத்-சுந்தரேசுவர ஐயர். கூஎ.

தமிழ்ச்சொல் விளக்கம்:—ஸ்ரீமத் - மாகறல்-கார்த்திகேய முதலியார் [௱ச.

தமிழ்ச்சொல் விளக்கவாசங்கை:—ஸ்ரீமத்- அ. சிதம்பர முதலியார். [௱௦சு.

தமிழ்ப்பழஞ்சரிதம்:—ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத்தேவர் ருரு

தலமுறையாராய்ச்சி:—ஸ்ரீமத்- மு. சாம்பசிவ நாயனார். உஎச. [௱சஅ, சஉக.

தளசிங்கமாலை;—பத்திராசிரியர். சச

தன்சரிதமுணர்த்துமொழி:—ஸ்ரீமத்-I. சாமிநாத முதலியார். உகூஅ. [௱ச௦

தனிச்செய்யுட்கோவை:—பத்திராசிரியர் உச

தாவரநூல்:—G. N. R. ௱௦௱

திருக்குறட் பரிமேலழகருரை விளக்கம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர் [சூ

உள்ளுறை.

திருக்குறளாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. சண்முகம்பிள்ளை. உ௦௯, ௩௨
[௩௮௫, ௪௪

திருக்குறளாராய்ச்சி யாக்கேபம்:—ஸ்ரீமத்-ச. கந்தையபிள்ளை. ௫௨

திருவரங்கத்தமுதனார்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ் M.A. ௩௮

நக்கீரனார்:—பத்திராசிரியர். ௫௫

நம்பிக்கையும் விசித்திரங்களும்:—"ஜநவிநோதினி" ௩௯

நம்பியகப்பொருள்;—ஸ்ரீமத்-ச. கந்தைய பிள்ளை. ௫

நல்லொழுக்கம்:—ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ௧௮, ௫௯, ௧
[௧௨௯, ௧௧௭, ௧௮௫, ௩௦௮, ௩௩௫, ௪௦௯, ௪௪௯, ௫௦

நன்மை பெறுவதற்குரிய நுட்பங்கள்:—"ஜநவிநோதினி" ௫௩

நித்திரை:—"ஜநவிநோதினி" ௫௯

"நுண்பொருண்மாலை":—பத்திராசிரியர். ௧௩௯, ௧௯௯, ௨௩
[௩௧௩, ௫௪௪, ௫

நூலாராய்ச்சி (1. புரூரவ சரிதை):—பத்திராசிரியர். ௮

பகழிக்கூத்தர்:—பத்திராசிரியர். ௧

பனி:—ஸ்ரீமத்-செ. வி. இராஜகோபாலாசாரியர். ௨௨

பாண்டியர்களும் தமிழ்ப்புலவர்களும்:—ஸ்ரீமத்- து. அ. கோபிநா
[ராவ், M. A. ௪௩௩, ௪௯

புத்தகக்குறிப்பு:—பத்திராசிரியர். ௫௦, ௭௫, ௧௦௨, ௧௪௮, ௧௭
[௩௭௧, ௯௧

புராதன இந்தியா:—ஸ்ரீமத்-எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார். M. A.
[௪௭௧, ௫௧

பெண்கல்வி:—ஸ்ரீமத்-கோ. வ. ஸ்ரீநிவாஸாசாரியர். ௨

பெரியபுராண அரும்பத விளக்கம்:—ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்
[௩௨, ௧௫௪, ௨௧௩, ௪௧௦, ௪௯௦, ௪௯௭, ௫௯

பெரியபுராண முதற்செய்யுளுரை:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ௪௫

பெரியாழ்வாரும் பாண்டியனும்:—பத்திராசிரியர். ௫

பெரும்பொருள் விளக்கப்பாடல்கள்:—பத்திராசிரியர். ௫

மழையைக்குறிக்கும் ஜந்துக்கள்:—பத்திராசிரியர். ௧௯

உள்ளுறை.

சற்குறட் கருப்பொருள்:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. [உசுஉ.

ப்மூர்த்திகள்:—ஸ்ரீமத்-தி. வேங்கடராம ஐயங்கார். ருகக.

பணி:—ஸ்ரீமத்-செ. வி. இராஜகோபாலாசாரியர். உஉகூ.

ப்பருங்கலக்காரிகை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. கoகூ, [கசசூ.

ப்பருங்கலக் காரிகைப்புத்துரை:—ஸ்ரீமத்-தி. த. கனகசுந்தரம் [பிள்ளை. B A. சகூo.

ப்பருங்கலக்காரிகை விருத்தியுரை:—ஸ்ரீமத்-சு. சரவணமுத்துப் [பிள்ளை. சஅரு.

ப்மை;—"ஜநவிநோதினி" ரூஉஎ.

ஜந்துக்களைப்பற்றிய நிலக்குறிப்புகள்:— } ஸ்ரீமத்-வி. நரசிம்ம ஐயங்கார். M. A. கககூ.

செந்தமிழ்" ஆறுந்தொகுதியில் வெளிவந்த நூல்கள்.

———:o:———

[முடிந்தவை.]

ம்பரப்பாட்டியல் மூலமுமுரையும்:—பத்திராசிரியர். உ. ரூ. ச. இ-ம் [பகுதிகள்.

ரமுவமிச சரித்திரம்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராவ். M. A. [க. உ, ரூ-ம் பகுதிகள்.

நக்கலம்பக மூலமுமுரையும்:—பத்திராசிரியர். க. உ. ரூ. ச-ம் [பகுதிகள்.

[முடியாதவை.]

நவாலவாயுடையார் காயிற்திருப்பணிமாலை:— } ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர். [ச, ரு, அ, கஉ-ம் பகுதிகள்.

ால்காப்பியச்செய்யுளியல் ச்சினார்க்கினியம்:— } ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார். அ. கூ. [கo-ம் பகுதிகள்.

துணை

செந்தமிழ்.

தொகுதி-௬] பிலவங்கவூல் கார்த்திகைமீ [பகுதி-

"செந்தமிழின்" ஆறாவதாண்டு.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—

என்னுந் தெய்வப்புலவர் திருமொழியைத் தலைமேற்கொண்
தொடங்கப்பெற்ற நம் "செந்தமிழ்" இம்முறையோடு, தன் ஐந்தா
பருவமுதிரப் பெற்று ஆறாம்பருவம் அடைகின்றது. நம் பத்தி
கைதொடங்கிய இவ்வறுபது மாதங்களுள்ளே, நல்லறிஞர் பல்லோ
எழுதிவந்த அரியபெரிய ஆராய்ச்சிகள், "மழைத்துளிபோலவந்தீண
டி" ப்பல அரிய விஷயங்கள் வெளிப்படுதற்குக் கருவியாயின என்
தைத் தமிழகமுழுதும் நன்கறியும். இவ்வாறு அறிஞர்பலரும் அன்
-ன் செந்தமிழின் இயற்கைநலத்தைச்சிறப்பித்த பெருநன்றி என்
றும் மறக்கத்தக்கதன்று. இனி, மேலேகூறிய திருக்குறட்குப் பரிமே
லழகர், "கேட்கும்பொருளும் கேட்குங்காலமும் சிறியவாயினும், அ
க்கேள்வி, மழைத்துளிபோல வந்தீண்டி எல்லாவறிவுகளையும் உளவா
கலின் சிறிதென்றிகழற்க" எனக்கூறிய உரையின் திட்பநுட்பங்க
, இவ்வைந்துவருஷகாலமாக நடைபெறுஞ்செந்தமிழை அபிமானி
துவரும் தமிழ்மக்கட்கு அநுபவசித்தமாக விளங்கியிருக்கும் என்ப
திண்ணம். நம்பத்திரிகையின் செயற்கைநலஞ்சிறத்தற்கு முக்கிய
ரணராகிய அவ்வபிமானிகள், இதுகாறும் நம் பத்திரிகையை
கரித்துவந்தமைக்கு நாமுள்ளன்போடு நன்றிகூறுவதோடு, இனி
நுங்காலத்தும் அன்னோரது அபிமானபலம் மிகுதியும் உண்டாம்
ன்னும் உறுதியுமுடையோம்.

ஸ்ரீ:

ஏகம்பவாணன்.

இவ்வாணன், வெண்ணைச்சடையன் முதலியோர்போல, வேளாளவகுப்பைச்சேர்ந்த பிரபு என்றும், இவனை வளர்த்த ஏகன்சாமரன், இவனுக்குக்கல்விகற்பித்த கம்பர், இவன் தந்தைவாணன்—ஆகிய இம்மூவர் பெயரையுமிணைத்து இவனுக்கு ஏகம்பவாணன் என்னும் பெயர்வழங்கியதென்றும், பிறவுஞ் சில தெய்விகவரலாறுகளும் விநோதரசமஞ்சரி முதலிய இக்காலத்து நூல்களில் வரையப்பட்டுள்ளன. இவன் வரலாறுகளாகக் கூறப்பட்டனவற்றில் உண்மைகள் இருத்தல்கூடுமாயினும், புனைந்துரைகள் முற்றும் இல்லாமற் போகவில்லை. இவ்வாணன், மகதநாடென்று வழங்கும் நடுநாட்டிலிருந்தாண்டவர்களாகிய மாவலிவாணாதிராயர் என்னும் சிற்றரசர்களிலொருவன்; இவர்கள், மகாபலியின் பரம்பரையினரான பாணவமிசத்தவரென்பதும், பிரபல அரசர்களாக ஒருகாலத்து விளங்கியவரென்பதும் சாஸனங்களால் விளங்குவதோடு, முற்காலத்தில், சோழர்களுடன் சம்பந்தமுஞ்செய்து வந்தார்கள். இதனை, மணிமேகலையில்*

"நெடியோன் குறளுரு வாகி நிமிர்ந்துதன்
அடியிற் படியை அடக்கிய அந்நாள்
நீரிற் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியோடு."

என, நெடுமுடிக்கிள்ளியின் மனைவி இவ்வமிசத்தவளாகக் கூறப்படுதலால் உணர்க. இவ்வாறு, மகதநாடாகிய நடுநாட்டிலிருந்து ஆண்டவன் ஏகம்பவாணன் என்பது, இவனைப்பற்றித் தனிப்பாடற்றிரட்டிலுள்ள "தேருலாப்புரவி"† என்னும்பாடலில் "மகதேசன் ஆறைகாவ

---

* சிறைகோட்ட மறக்கோட்டமாக்கியகாதை, அடி-௫௧-௫௫.

† "தேருலாப்புரவி வாரணத்தொகுதி திறைகொணர்ந்து வருமன்னரின், தேசமேதுனது நாமமேதுபுகல் செங்கையாழ் தடவுபாணனே, வாருமொத்தகுடி நீருநானுமக தேசனுறை நகர்காவலன், வாணபூபதி மகிழ்ந்தளித்தவெகு வரிசைபெற்றுவரு புலவன்யான், நீருமிப்பரிசு பெற்றுமீண்டுவர லாகுமேகுமவன் முன்றில்வாய், நித்திலச்சிகர மாடமாளிகை நெருங்குகோபுர மருங்கெலாம், ஆருநிற்குமுயர் வேம்புநிற்கும்வளர் பனையுநிற்குமத னருகிலே, அரசுநிற்கு மாசைச்சுமந்த சிலவத்திநிற்கு மடையாளமே."

"ணவாணபூபதி மகிழ்ந்தளித்த வெகுவரிசை" என வருவதால் தெரிவாம். இவ்வாணன் கம்பர்காலத்தவனென்பதற்கு யாதொரு மேற்கோளும் காணக் கிடையாது. இவ்வாணன், சேரசோழரை அடக்கிப் பாண்டியனையடக்க முடியாமல், அவனையும் வசப்படுத்தக்கருதி, தூதியர் நால்வரையனுப்ப, அவர்கள் சென்று பாண்டியன்மேல் விரகமுற்றுக் கூறியதாகச்சொல்லப்படும் வெண்பாக்கள் நான்கு, விநோதரசமஞ்சரி முதலியவற்றிற் காணப்படுதல் போலவே, தமிழ்நாவலர் சரிதையினும் சரித்திரக்குறிப்புடன் வருகின்றன. அவை வருமாறு:—

"தென்னவா மீனவா சீவலமா றுமதுரை
மன்னவா பாண்டி வாராமா—முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த தூயதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலே கண்."

"மாப்பைந்தார்க் கல்லமுத்து வண்ணத்தார்க் கல்லவஞ்சி
வேப்பந்தாக் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கு நெல்வேலிச் சீவலமா றுதமிழை
யாய்ந்துரைக்கும் வீரமா று."

"வேம்பா கினு மினிய சொல்லிக்கு நீயிலந்த
வேம்பா கினுமுதவ வேண்டாவோ—மீன்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள் மான்."

இந்த மூன்று கவிக்கும் மாலைகொடாதுகைப்
பின்னொருத்தி பாடியது.

"இலகு புகழாறை யேகம்ப வாணன்
அலகை வரும்வருமென் றஞ்சி—யுலகறிய
வானவர்கோன் சென்னியின்மேல் வண்ண வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு."

இது கேட்க மாலைகொடுத்தான்.

என்பன. இவற்றால், இந்நான்கு பாடல்களும் பாண்டியனொருவனையே பற்றியதென்பதும்; அப்பாண்டியன் "சீவலமாறன்" "வீர

மாறன்" என்னும் பெயருடையான் என்பதும் நன்கு புலப்படும். இச் சீவலமாறன் இற்றைக்கு 340-வருஷங்கட்கு முன் கல்வியுங் கொடையுங் கவினப்பெற்றுத் திருநெல்வேலிப் பிரதேசத்தை யாண்டவன். இவன் சக வருஷம் 1486-ல் முடிசூட்டப்பட்டான்; இதனை—

"சகன்காலமாயிரத்து நானூற்றெண்பத்தாறிற்சலதிசூழ்ந்த
செகங்காணவிரத்தாக்ஷிசித்திரையிலிருபதாந்தேதிவேந்தர்
புகழ்ந்தேவல்செய்பூர்வதிதியாறில்முதல்வாரம்புனர்பூசத்திற்
சுகந்தாதிபுனையழகன்சீவலவேளெனமகுடம் சூடினனே"‡

என்னும் சாஸனப் பாடலால் உணர்க. இவனுக்கு "வீரமாறன்" என்னும் பெயர் வழக்கம்—

"பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் காசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூருமே—விற்றவச
வல்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்."‡

என்ற பாடலிலும் பயிறல் காண்க. இவற்றால், ஏகம்பவாணனுக்குப் பெரும்பகைவனானவன் சீவலமாறனென்பதும், அதனால் அவ்வாணன் காலமும் இற்றைக்கு 340-வருஷங்கட்கு முற்பட்டதே யென்பதும் ஐயமறத் தெளிவாகின்றன. ஆகவே, கம்பரிடங் கல்வி பயின்றவன் ஏகம்பவாணனென்பதும், அவன் பெயர்க்காரணமும் போலியாமாறு காண்க.

இனி, சீவலமாறன் "வல்லமெறிந்தான்" என்று மேற்குறித்த வெண்பாவிற் கூறப்படுவதால், இப்போர் ஏகம்பவாணனுடன் நிகழ்ந்ததாகத் தோன்றுகிறது. ஆயின், இவ்வல்லம், பாணவமிசத்தவர் ஆண்ட மகதநாட்டைச் சார்ந்ததும் சாஸனங்கள் மிகுந்து காணப்படுவதுமாகிய திருவல்லமென்னும் ஸ்தலமாதல் வேண்டும். சீவலமாறன்காலத்தில் வித்யாதர மகாராஜர்களால் தென்னாடு படை

‡ ஸ்ரீ. கோபிநாதராயரவர்கள் எழுதிய "பாண்டிய சாஸனங்கள்" என்னும் விஷயம் பார்க்க. (செந்தமிழ்த் தொகுதி-௩, பக்-௧௧௪.)

யெடுக்கப்பட்டு ஜயிக்கப்பெற்றதென்று தெரியவருதலால், அவ்வரசரின் சேனாதிபதியாக ஏகம்பவாணன் இருக்கக்கூடும் என்றும் கருதலாம். இவைகிற்க.

"சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த வருஞ்சேற்றில்— மானபரன்
மாவேந்தன் வன்கண்ணன் வாணன் பறித்துநடும்
மூவேந்தர் தங்கண் முடி."

என்னும் வெண்பா, விநோதரசமஞ்சரி முதலியவற்றில், வாணன் உழவுக்குச் சென்றிருந்தபோது சேரசோழபாண்டியர் அவன் வீடு நோக்கி வந்து அவன்சென்றிருந்த வேலையைப்பற்றி இழித்துக் கூற, அக்காலத்தே வாணன்மனைவி அவர்களை நோக்கிக் கூறியதாகச் சரித்திரக்குறிப்புக் காணப்படுகின்றது. தமிழ்நாவலர் சரிதையிலே, இப்பாடற்றலைப்பில் "வாணனுடைய பாணன், மதுரையிற் போனபோது, பாண்டியன்கொடுத்த தியாகம் வாணன் கையினாலேற்ற வலக்கையாலல்லாமல் இடக்கையாலேற்க, பாண்டியன் உளவனென்றறிந்து (இகழ்ந்தபோது) பாடியது" எனக்காணப்படுகிறது. முன்வழக்கும் பின்வழக்கும் இவ்வாறு மாறுகின்றனவாயினும் இவற்றில் நாம் கொள்ளத்தக்கது, முன் வழக்கேயாகும். இனி "ஏகம்பவாணன் தன்தாசிமேற் கோபமாகி, விலங்குகொண்டுவா என்றபோது (அத்தாசி) பாடியது" என்னும் தலைப்பின்கீழ் ஓர் அழகிய பாடலும் அச்சரிதையில் காணப்படுவது வருமாறு:—

"அலங்க லணிமார்ப னுறையர்கோன் வாணன்
விலங்கு கொடுவருக வென்றான்— இலங்கிழையீர்
சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு" எனக்காண்க.

இவற்றால், ஏகம்பவாணன், மாவலிபரம்பரையினராய பாணவமிசத்தைச் சேர்ந்தவனென்றும், இற்றைக்கு 340-வருஷங்கட்கு முன் விளங்கிய சிவலமாறன் காலத்தவனென்றும், கம்பர் காலத்தோடு இவன் சம்பந்தமுடையவனல்லனென்றும் மற்றுஞ்சில வரலாறுகளும் வெளியாதல் காண்க.

பத்திராசிரியர்.

சில பழையபாட்டுக்களும் அவைகளின் காலமும்.

திருக்காட்டுப்பள்ளிக்கு இரண்டுமைல் தூரத்தில் செந்தலை என்றொரு கிராமமிருக்கின்றது. இக்கிராமத்தின் பழம்பெயர் சந்திரலேகைச் சதுர்வேதமங்கலமென்பது. இதன் நடுவில் ஓர் பெரிய சிவாலயமுண்டு. இதிலமர்ந்துள்ள சிவபிரானுக்கு மீனாக்ஷிசுந்தரேசுவரர் என்று திருநாமம். இச்சுந்தரேசுவரர் கோயிலின் மஹாமண்டபத்துக்குமுன் கட்டப்பட்டிருக்கும் மண்டபத்தின் கால்கள் நான்கும் வெகுபளபளப்பாய் மெருகேற்றப்பட்டு, மிகப்பழமையான எழுத்தில் எழுதப்பட்ட தமிழ்ச் சாஸனங்களைத் தாங்கிநிற்கின்றன. இம்மண்டபம் கட்டுங்காலையிலேயே இத்தூண்களின்பேரில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தனவென்பது, அடியில் வருவதனால் நன்கு விளங்கும். மேற்கூறப்பட்ட தூண்களின்மீது கற்களையேற்றி மண்டபங்கட்டவேண்டியிருந்தபடியால், இணைக்கள் சரிப்படுத்தக்கருதி இவைகளின் மேற்பாகங்களை செதுக்கியிருக்கின்றார்கள். இவ்வாறு செதுக்கியதில் முதல் ஒன்றிரண்டு வரிகள் ஒவ்வொரு தூண்களிலும் சிதைந்துபோய்விட்டன. இத்தூண்களின் கீழ்ப்பாகங்களில் வெட்டியிருந்த எழுத்துக்களும் காலாதிக்கத்தாலும் அஜாக்கிரதைகளாலும் பெரிதுங் கெட்டுப்போய்விட்டன.

முதல் தூணின் முதற்சாஸனத்தால் இத்தூண்களைச் செய்வித்தோன் பெயரும், இவைகளை வைத்திருந்தவிடமும் மற்றும் பலசங்கதிகளும் விளங்குகின்றன. பெரும்பிடுகுமுத்தரையனாயின சுவரன் மாறன் என்னும் ஓர் அரசன் ஓர் பிடாரியார் கோயிலெடுப்பித்து, அக்கோயிலில் இத்தூண்களை யமைத்து, அவைகளின்பேரில் தான் எறிந்தவூர்களும், தன் பட்டப்பெயர்களும், தன்னைப் பாடினோர் பெயர்களும் எழுதுவித்தான்; இத்தூண்களிற் காணப்படும் மற்றோர் சாஸனத்தால் இப்பிடாரியார் கோயில் நியமித்துக் கட்டப்பட்டதென்று விளங்குகின்றது. ஆதலால், நியமத்து இடிந்து கிடந்திருக்கும் ஓர்

பழம்பிடாரிகோயிலினின்று செந்தலைக் கிராமத்தார் இத்தூண்களைக் கொண்டு தம்மூர்க்கோயிலில்மண்டப மெடுத்திருக்கவேண்டுமென்பது பெறப்படுகிறது.

பெரும்பிடுகுமுத்தரையன் வம்சபாரம்பரியம் அடியில் வருமாறு முதற்கூறிய சாஸனத்தில் விவரித்திருக்கிறது:—

பெரும்பிடுகுமுத்தரையன் (I) ஆயின
குவாவன் மாறன் (அவன் மகன்)
|
இளங்கோவதியரையனாயின
மாறன் பரமேஸ்வரன் (அவன் மகன்)
|
பெரும்பிடுகுமுத்தரையன் (II) ஆயின
சுவரன் மாறன்.

இவன்காலத்திய நான்கு தூண்கள் பேரிலும் எழுதியுள்ள இவன் பெயர்கள், ஸ்ரீமாறன், ஸ்ரீகள்வரகள்வன், ஸ்ரீ ஸத்ருகேஸரி, ஸ்ரீ அதிஸாஹஸநு, ஸ்ரீ அபிமாநதீரநு, ஸ்ரீதமராலயன், என்பன. இவையன்றி, இவனுக்கு நெடுமாறன், தஞ்சைக்கோன், வல்லக்கோன் என்னும் மறுபெயர்களுமிருந்தன வென்பது பாட்டுக்களால் ஏற்படுகின்றது.

இவ்வரசனைப் பாடின கவிஞர் பாச்சில்வேள் நம்பனும், ஆசாரியர் அநிருத்தரும், கோடாற்றிளம் பெருமானாரும், கிழார்கூற்றத்துப் பவதாய மங்கலத்து அமருண்ணிலையாயின குவாவங்காஞ்சனும் என்பவர்களே. இவர்கள் பாடிய பாட்டுக்களிலநேகம் வெண்பாக்கள். சில கலித்துறையுமுள. இப்பாட்டுக்களால், சுவரன் மாறன் "அழுந்தியூ ரென்னு மூரில் செங்கட்பகடு சென்றுழக்கவங்குலந்தார் தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரக்கச்" செய்தானென்றும், மணலூர்ப்போர் வென்று, பின் "மறப்படை மீனவன் வல்லரண் பல்லவன் சேனைக்கன்று புறப்படுமாறு பொருகளிறு" களை ஏவினனென்றும், "பனையைப் பகடுகடாவென்று பல்லவன் வெல்லத் தெ

ன்னின் முனையைக் கெடச்சென்று"ன் என்றும், "மாறங்கைக்கென்றுடைர் காதலியர் தீநாட" ச்செய்தானென்றும் கொடும்பாளூரைக் காய்ந்தெறிந்து, அதனுடைய நெடுமதில்களை இடித்து நீறுபடச்செய்தான் என்றும், காரைவாய்ப்போர் வென்றானென்றும், புகழி, காந்தளூர், கண்ணனூர், அண்ணல்வாயில், திங்களூர், முதலிய விடங்களிலும் செருச்செய்து ஜயமடைந்தானென்றும் வெளியாகின்றன. ஆதலால் இவன் பல்லவ அரசர்கட்கு நண்பனென்றும், தென்னவர், வில்லவர்கட்கு பகைவனென்றும் விளங்குகிறது.

இவன் நாட்டுக்குச் சுற்றுப்பக்கத்திருந்தவர்கள் பல்லவர், தென்னர், வில்லவரெனின் இவன் ராஜ்ஜியம், இப்போதைத் தஞ்சாவூர் ஜில்லா முழுதும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் காவிரிக்குத் தென்பாகமும் அடங்கியதாயிருக்கவேண்டும். திருச்சிராப்பள்ளிக் கடுத்தாற்போல முத்தரசநல்லூர் என்னும் கிராமமிருப்பதும் கவனிக்கத்தக்கது.

முதல் இராஜராஜன் காலத்தே, தஞ்சை பிராஜராஜேசுவரத்துச்சாஸனங்களில், இவ்வரசன் "சேரமானையும் பாண்டியர்களையும் எறிந்துகொண்ட பண்டாரம்" என்று பாண்டியர்களை எப்பொழுதும் பன்மையிலேயே குறிக்கிறான். இதனாலேயே பாண்டியநாடு ஒரே காலத்தில் பல பாண்டியவரசர்களால் ஆண்டுவரப்பட்டதென்று ஊகிக்கவேண்டியதாகின்றது. அப்படியாயின், முத்தரையர்களும் பாண்டியவரசர்களிலொருவராவர். இவர்கள் மீனவர்களாகிய தென்னவர்களினின்றும் வேறானவர்களென்பது, நார்த்தாமலையில் திருப்பதுங்கனென்னும் பல்லவவரசன் காலத்துச் சாஸனமொன்றால் வெளியாகிறது. அச்சாஸனத்தில் விடேல் விடுகுமுத்தரையனென்பவனொருவனுக்கு சாத்தம்பழியிலியென்றோர் மகனிருந்தானென்றும், அவன் மகள் பழியிலிசிறியநங்கை என்பவள், மீனவன் தமிழதியரையனாயின மல்லனனந்தனுக்குப் புக்காள் என்றும் கூறியிருக்கிறது. மீனவர்கட்குப் பெண்கொடுத்தானெனில் முத்தரையனும் மீனவனும் வெவ்வேறு வகையாராகவேண்டும். ஆதலால் முத்தரையர்களும், மீனவராகிய தென்னவரும் ஏககாலத்தில் பாண்டிநாட்டையாண்டுவந்தவர்களாவார்கள்.

திருவாலங்காட்டுத் தாமிரசாஸனத்தில், விஜயாலயன் என்னும் சோழசக்கரவர்த்தியானவன் தஞ்சாவூரைப் பிடித்துக்கொண்டான் என்று கூறியிருக்கிறது. ஆதலால், தஞ்சைக் கோன்களாயிருந்த முத்தரையர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டிருக்கவேண்டுமென்பது தேற்றம்.

இச்செந்தலைச் சாஸனத்துக்கூறப்பட்ட பெரும்பிடுகுமுத்தரையன் (II) எக்காலத்தானென்பது சாஸனத்தால் விளங்கவில்லை. ஆயினும் இதன் எழுத்துக்களின் வடிவாலும், இன்னும் கீழ்வரும் காரணங்களாலும் இவன் காலம் ஒருவாறு நிர்ணயிக்கலாம். கூரத்துத் தாமிர சாஸனத்தால் பல்லவ பரமேசுவரவர்ம்மன் (I) காலத்துக் கூரத்து வித்தியாவிந்த பல்லவபரமேசுவர கரமென்னும் கோயில் கட்டப்பட்டதென்றும், அதன் பக்கத்தே பரமேசுவர தடாகமென்னும் ஏரி தோண்டப்பட்டு அதற்குப் பாலாற்றினின்றும் நீர்பாயப் பெரும்பிடுகு காலென்று ஒரு கால்வாயும் வெட்டப்பட்டதென்றும் தெரியவருகிறது. ஆதலால் முதல் பரமேசுவரவர்ம்ம பல்லவரசனுக்கு வித்தியாவிநிதபல்லவன், பெரும்பிடுகு என்னும் மறுபெயர்களிருந்தனவென்பது நன்கு புலப்படும். சிற்றரசர்கள் சார்வபௌமசக்கரவர்த்திகள் பெயர்களைத் தரித்தல் சாதாரணமென்று பலதடவை சொல்லியிருக்கிறேன். குவாவன் மாறன், பெரும்பிடுகுமுத்தரையனென்று பெயர் தரித்ததினாலும், பல்லவர்கள் பக்ஷமாய்த் தென்னவருடன் போர் பொருதிருத்தலாலும், இவன் வமிசத்தானாகிய விடேல்விடுகுமுத்தரையன், அவன் மகன் சாத்தம்பழியிலி முதலியோர் பல்லவர்கட்குக்கீழ்ப்படிந்திருந்தபடியாலும், இவனும் (குவாவன் மாறனும்) பல்லவர்கள்கீழாண்ட சிற்றரசன் என்னலாம். அப்பொழுது இவன் காலம் முதல்பரமேசுவரவர்ம்மன் காலமாகவேண்டும். இவன் மகன் பரமேசுவரன் ஆகிய இளங்கோவதியரையன், பல்லவசார்வபௌமசக்கரவர்த்தியின் பெயரைத் தரித்திருக்கவேண்டும் இம்முத்தரையன் பல்லவவரசனாகிய இரண்டாம் நரசிம்மவர்ம்மன் (மேற்படி முதல்பரமேசுவரவர்ம்மன் மகன்) காலத்தானவான். பரமேசுவரமுத்தரையன் மகன் சுவரன்மாறன், தன் பாட்டன் பட்டப்பெயராகிய பெரும்பிடுகுமுத்தரையன் என்னும் பெயரைப்பெற்று, இரண்டாம் பர

மேசுவரவர்ம்மன் காலத்து ஆண்டிருக்கவேண்டும். ஆதலால் இவ்வரசன் கி. பி. எட்டாம் நூற்றுண்டின் துவக்கத்திலரசுபுரிந்திருந்தவனென்று தோற்றுகிறது.

இவ்வம்சத்தாரையேதான் நாலடியாரில் "பெருமுத்தரையர்" என்று புகழ்ந்தெழுதியிருக்கிறது. இவர்காலத்து தமிழ்வெகு நன்றாய் வளர்க்கப்பட்டு வந்திருக்கவேண்டும்.

முதல்ஸ்தம்பத்து வடபக்கத்து மேல் பாகத்தில் வரைந்துள்ளது:—

1. [ஸ்ரீ-பெரும்பி]டுகுமுத்தரை-
2. யனுயின குவாவன்மாறனவ-
3. ன்மகனிளங்கோவதியரைய-
4. னுயின மாறன்பரமேஸ்வரன
5. வன் மகன் பெரும்பிடுகுமுத்த-
6. ரையனுயின சுவரன்மாறனவ-
7. னெடுப்பித்த படாரி கோயிலவ-
8. னெறிந்தவூர்களுமவன்பேர்க-
9. ளுமவனைப்பாடினூர் பேர்களுமி-
10. த்தூண்கண் மேலெழுதின இவை

ஷை தூணின் தென்பக்கத்து மேல் பாகத்தி லெழுதியுள்ளது:—

1. ஸ்ரீமாறன்
2. ஸ்ரீ ஶத்ருகேஸரி
3. ஸ்ரீ கள்வர்கள்வநு
4. ஸ்ரீ அபிமாநதீரநு

ஷை தூணின் மேற்குப் பக்கத்து மேல் பாகத்தில் எழுதியுள்ளது:—

1. [செங்கட்பொருந]...
2. சேர்வெல்கொடி [யோன்]-
3. வாண்மாறன் செங்கட்க-
4. ரும்பகடுசென் றுழக்கவ-
5. ங்குலந்தார் தொழுந்திமா-
6. வழுந்தச் செங்குருதிமண்-
7. பரந்தவூ ரழுந்தியூரேன்[ஹமூர்.]

ஷை தூணின் கிழக்குப் பக்கத்து மேல்பாகத்து எழுதியுள்ளது:—

1. [க]ப்பழடிக்கழுகுகொ-
2. ழுங்குடர்கவ்வ விழிகட்-
3. பேய்புண்ணளைந்து
4. கையூர்பப்பொர்ம-
5. ணலூர் வென்றதேமண்-
6. ணளைந்த சீர்மாறன்வாள்
7. பாச்சில் வேள்நம்பன்
8. பாடின (உ)

ஷை தூணின் மேற்குப் பக்கத்து கீழ் பாகத்து எழுதியுள்ளது:—

1. பால்கொண்ட செவ்வாய்
2. விளையாமொழிப்பரு-
3. வத்து முன்னம் வேல்கொ-
4. ண்ட
5.
6.
7. (ந)

ஷை தூணின் கிழக்குப் பக்கத்துக் கீழ்பாகத்து எழுதியுள்ளது:—

1. நிற்கின்றதண்பணைதொ-
2. ழும் தஞ்சைத் திறம்பா-
3. டிசின்ஞர் விற்கின்ற வீரர்க-
4. ளூர்கின்றவி[ப்பி] ணக்கு-
5. ன்றுகண், கற்குண்டயா-
6. னை[க்கு].........ன்ம...
7. & 8. .... (ச)

ஷை தூணின் வடக்குப் பக்கத்து கீழ்பாகத்து எழுதியது:—

1. [எ]ங்கையளவிற்றே-
2. ய் பாணவகல்விக்கு-

3. மங்கைச் செருவேலம-
4. ர் வல்ல......[கு]மு.........
5. ந்த......
6. .... (கு)

ஷை தூணின் தென்பக்கத்து கீழ்ப்புறத்து எழுதியது:—

1. மறப்படை மீனவன்வ-
2. ல்லரண் பல்லவன்சே-
3. னைக்கன்று புறப்படுமா-
4. றுபொருகளிற்றுக் ..... (சு)

இரண்டாம் தூணின் தெற்குப்புறத்து மேல்பாகத்து எழுதியுள்ளது

1. ஸ்ரீமாறன்
2. ஸ்ரீ ஶத்ருகேஸரி
3. ஸ்ரீ கலாகலா
4. ஸ்ரீ கதிவாஹலா

ஷை தூணின் மேற்குப் புறத்து மேல்பாகத்து எழுதியுள்ளது:—

1. வாளமருள் வாகைப்பூ-
2. க்குஞ்சிக்கமழ்கண்ணி
3. க்கோமாறன்றஞ்சைக்-
4. கோன் கோளாளிமொய்ம்பிற்
5. கொடும்பாளூர்காய்ந்தெரித்தா-
6. ன்றோளா லுலகளிக்குந்தோள். (எ)

ஷை தூணின் வடக்குப் புறத்து மேற்பாகத்து எழுதியுள்ளது:—

1. ர்க்கேயல்லையா[ய]ர-
2. காலந்தான் முல்லைக்கேய்
3. முற்படுமோ என்றென் றுவல-
4. லக்சோன் காரைவாய்ப்போர்-

5. வென்றவேன்மாறன்கைபோலுங்-
6. காரைவாய்க் கேளேனேய் கண்டு. (அ)

ஷை தூணின் கிழக்குப் பக்கத்து மேல் பாகத்து எழுதியுள்ளது:—

1. லாத்தொய்த்தனவாலெங்-
2. கும்வருபுனல் சூழ்வல்லக்கோ-
3. மாறன் செருவில் மறங்கூர்வாய்-
4. ப்பட்டாருடல் சூடைந்து மாந்திப்-
5. புறங்கூர்வாய்க்கொண்டெ-
6. முந்தபுள் பாச்சில்வேள்-
7. நம்பன் பாடின- (கூ)

ஷை தூணின் தெற்குப்பக்கத்து கீழ்பாகத்து எழுதியுள்ளது:—

1. பனையைப்பகடுகடா-
2. வென்று பல்லவன்வெல்-
3. லத்தென்னன் முனையைக்-
4. கெடச்சென்ற மாறன் முகில்-
5. வளர்பீலி உந்தச்சுனைய-
6. ச்சுனை மணிப்பாறை அப்-
7. பாறை சொல்லென் வினை-
8. [வினை]...................... (கo)

ஷை தூணின் மேற்குப் புறத்து கீழ்பாகத்து எழுதியது:—

1. சொற்புகு தொண்டைக்க-
2. ளிபுகுதூமதிபொன்முக-
3. த்தாள் பொற்புகவெற்புப்-
4. புகுதிக[ண்டா]ய் புகழிப்போ-
5. ருதார்க்-கவிற்புக்க[கொ?]
6. [ள்]வன்க[ள்வ]ர்கள்வன்றஞ்-

7. [சை]-ற்புகழாளனப்-
8. .... (௧௧)

ஷை தூணின் கிழக்குப் புறத்து கீழ்பாகத்து எழுதியுள்ளது:—

1. சேட்டிணர் பூந்தண்பொழிற்-
2. செம்பொன்மாரிக்கடி அரண-
3. ம் மூட்டின சீற்றம் முன்சென்ற-
4. து பின்புபகட்டினத் தோர்கெ-
5. [மர்]மாறன்க [டி]............க்க......

.... (௧உ)

---

1. கோர்ட்டாற்-
2. ளம்பெரு-
3. மாணுர்பாடிய-

---

1. கோட்டாற்றி- 2 ளம்பெரு- 3 மாணுற்பாடிய

மூன்றும் தூணின் கிழக்குப் பக்கத்து மேல் பாகத்து எழுதப்பட்டுள்ளது:—

1. எறிவிசும்புமிருகி-
2. லமாய்த் தென்பவா-
3. ன் மாறன் செருவேன்-
4. மறங்கனன்று சீறக்-
5. கொடிமாடத்தண்கோடு-
6. ம்பைக் கூடாதமன்ன-
7. ர் நெடுமாமதிலிடிந்த நீறு (௧௩)
8. கிழார்க்கூற்- 9. றத்துப்பவ- 10. தாயமங்க-
11. லத்துஅமருண்- 12. ணிலைஆயின 13. குவாவங்
காஞ்ச- 14. ன்பாடினபாட்டி- 15. த்தூண்
மேலன- 16. எல்லாம்.

ஷை தூணின் தெற்குப் பக்கத்து மேல் பாகத்து எழுதியுள்ளது:—

1. ஸ்ரீதமராலயன்
2. ஸ்ரீ வாஹிஜோடியிரநு
3. ஸ்ரீகள்வரகள்வன்
4. ஸ்ரீ ஶத்ருகேஸரி

ஷை தூணின் மேற்பக்கத்து மேல்பாகத்து எழுதியுள்ளது;—

1. சேருவ [வ].. ......ன-
2. தனுற்சிந்தியார்போலு-
3. மருவலராய்வாண்மா-
4. றன்சிறக்கருவினைகண்-
5. டோற்றவண்டறவங்கார்-
6. தோற்றுங்காந்தளூர்மண்-
7. டோற்றவேந்தர்மனம்.

ஷை தூணின்வடக்குப்பக்கத்து மேல்பாகத்தில் எழுதியுள்ளது.

1. என்கினிருங்கிளை-
2. யுமேறற்கரியவேய்வ-
3. ண்கைச்செருமாறன்வா-
4. ள்காய்த்திவிண்படர்-
5. வான்செய்நாடுதாழூர்ந்த-
6. மாநாடக்கண்ணனூர்க்கோ-
7. நாடர்புக்கொளித்தகுன்று. (கரு)

ஷை தூணின் கிழக்குப்பக்கத்து கீழ்பாகத்திலெழுதியுள்ளது:—

1. நின்றதுவில்லவன்வல்-
2. லரண்பல்லவன்சே-
3. [னை]கொள்வான்சென்றது

.... (க௬)

ஷை தூணின் தெற்குப்பக்கத்து கீழ்பாகத்து எழுதியுள்ளது:—

1. மலர்ந்ததார்வாண்மாறன்
2. மன்னண்ணல்வாயிற்கல-
3. ந்தநாட்காணலாங்காண்க-
4. உலந்தவர்தமென்பருந்து-
5. சூற்பேயிருந்துறங்கவீழ்கு-
6. [டர்]...[ரு]ந்துசிந்தபகடி-
7. .... (கள)

ஷை தூணின் மேற்குபக்கத்து கீழ்பாகத்து எழுதியது:—

1. தாழும்பூசற்றிங்களூர்க்-
2. தெவ்வர்மானந்தளரத்-
3. [தெ]ன்னன்வெழுங்களப்-
4. [ப]ட்டதுகொண்டவேந்தன்
5. மன்பூமலராள்வாழு[ங்]-
6. தடவ[ரைத்]தோணேடுமாற-
7. ன்......................வற்சூழும்-
8. .... (கஅ)

தூணின் வடக்குப்புறத்துக் கீழ்பாகத்து எழுதியுள்ளது:—

1. நாகங்கண்டஞ்சவெண்-
2. ணெஞ்சங்கல்லென்ன-
3. வொல்லென்கடனீர்ம[ா]-
4. [ை]க்கொண்டெறிவ[ரதா?]
5. த்... மாறனெங்[கோ]ன்
6. [சு]டர்க்கண்மேகங்கொ-
7. ண்டான்வ......... (கக)
8. ப்பக்...

நான்காந்தூணின் தென்புறத்தில் மேற்பக்கத்து எழுதியது:—

1. ....

2. போலரைசுபிறவாபிறநெடு-
3. மேருநெற்றிப்பொன்போல்ப-
4. சுங்கதிராயிரம்விசும்பொற்றே-
5. ர்ப்பருதிக்கென்போதரவிடு-
6. மோஇணைச்சோதிஇருவி-
7. சும்பே(ய்) | சூவாயடிரீ
8. சுதிரா-ஒரீ பாடியது | —

கூ தூணின் மேற்குப்புறத்து மேல்பக்கத்து எழுதியது:—

1. ……… ..
2. ற்றதிதுகண்டான்றஞ்சை-
3. ச்செம்புலநாட்டுவெண்-
4. கோடல்விண்டபோதுகொ-
5. ண்டாயர்மலையப்புது-
6. மனைமீது செந்தீத்தா-
7. துகண்டாலன்னகோவ-
8. [ங்க]ளூர்கின்றதாழ்புறவே (ப்)

கூ தூணின் கிழக்குப்பக்கத்து மேற்பாகத்து எழுதியுள்ளது;—

1. ………
2. ற்பாண்மகனேய்பண்-
3. டெலாயாமறிதுமெங்க-
4. யர்க்கேய்சொல்லுநீய்
5. மாமறங்கைத்தென்னுடர்-
6. காதலியர்தீய்நாடவாய்சிவ-
7. [ந்]தமின்னுடுவேன்மாறன்மெய்.

ஷை தூணின்மேற்குப்பக்கத்து கீழ்பாகத்து எழுதியது:—

1. தன்முதலாயமும் பூவை-
2. யுந்தன் கைக்கிளியுமுன்-
3. பிட்டேன்முதலனபுமென்-
4. ஞகைச்செய்தாளியக்க[த்]-
5. தைவிண்டார்வனமுதலட்-
6. ...க்கருங்கைப்பகடுய்த்-
7. தமாறன்றெவ்விற்கனமுத-
8. ...ங்கடத்தெதின்னபின்-
9. .... ரி ....கயெ
10. அமருண்ணிலைபாடின

இன்னும் வரும்.

து. அ. கோபிநாதராவ்.

நல்லொழுக்கம்.

[இலக்ஷ்மணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(தொகுதி-ரு. பகுதி-கஉ-ல். ருசுச-ம் பக்கத்தொடர்ச்சி.)

'சார்லஸ் லாம்ப்' என்பவர் இந்தியன் ஆபீசில் நித்யமாயிருந்த கடினமான எழுத்துவேலையைவிட்டு நீங்கினபொழுது தன்னைமிகவும் சந்தோஷமுள்ளவனாக மதித்துக்கொண்டனர். "இன்னும் பத்து வருஷத்திற்குப் பதினாயிரம் பவுன்கொடுத்தபோதிலும் என்னுடைய சிறைச்சாலைக்கு இனிநான் போகேன்" என்று ஓர் இஷ்டனிடத்திற் சொன்னார். அதே ஆனந்தாதீதமான நிலைமையில் 'பார்னார்ட் பேஸ்டன்' என்பவருக்கு அவர் எழுதியது வருமாறு:—"ஒருகடிதம் எழுதுவதற்கு என்மூளையில் உறுதிப்பாடு காண்பது அருமை. நான் விடுதலைபெற்றிருக்கிறேன். காற்றைப்போல சுவயசஞ்சாரியாயிரு

க்கிறேன். இன்னும் ஐம்பது வருஷம் வாழ்வேன். என்னுடைய விட்டாற்றிநேரத்திற் சிலபாகத்தை உமக்கு விற்கலாமென்று இச்சிக்கிறேன். ஒன்றுஞ்செய்யாதிருத்தலே உறுதியாய் ஓர் மனிதனுக்குச் சிறந்தகாரியம். அதற்கு அடுத்தபடி ஒருக்கால் நல்லகாரியங்களைச்செய்தல்'' என்று அவர் சொன்னார். இரண்டுவருஷம்—இரண்டுநீடித்த வருஷங்கள் மெதுவாய்ச்சென்றன. சார்லஸ்லேம்பினுடைய கருத்துகள் முற்றிலும் மாறுதலடைந்தன. உத்தியோகவேலை மட்டோ, தினமும் ஏற்பட்ட வட்டம்வருகையாகிய மூடனுடைய தொழிலுங்கூடத் தனக்கு நன்மையாயிருந்ததென்று தான் அறியாமலிருந்தபோதிலும் அதனை இப்பொழுது அவர் கண்டுபிடித்தார். நேரமானது முன் அவருக்கு இஷ்டமாயிருந்தது. இப்பொழுது சத்துருவாய்விட்டது. திரும்ப அவர் 'பார்னார்ட்பேஸ்ட்டன்' என்பவருக்கு எழுதியது வருமாறு:—"அளவுகடந்து வேலைசெய்வதுதான் அதிகக் கேடானது. வேலைசெய்வதுகேடில்லையென நான் உமக்கு உறுதிசொல்லுகிறேன். மனதானது தன்னைத்தானே தின்கின்றது. அது மிகவும் மனோரம்மியமற்ற ஆகாரம். கிட்டத்தட்ட எதற்கும் நான் கவலைப்படுவதை விட்டுவிட்டேன். நம்பிக்கை இழந்தவனுக்குத் தெய்வகிருபையானது ஒருக்காலும் கிடையாது. நான்செய்யக்கூடியதும் அதிகமாய்ச்செய்யக்கூடியதும் காலால் நடப்பதேயாம். நான்நேரத்தைக் கொன்ற பெரிய கொலைபாதகன். ஆனால் தெய்வவாக்கானது மௌனம் அடைந்திருக்கின்றது."

மிகவும் சிரமப்பட்டு இளையாமல் முயன்றவராயிருந்த ஸர்வால்ட்டர் ஸ்காட்டைவிட தாளாண்மையின் அனுபவசித்தமான முக்கியதையைக்கண்டவர் வேறொருவருமிலர். எல்லாக்காலங்களையும் தேசங்களையும் ஒன்றுபடுத்திப் பார்த்தால், உண்மையான மனஅடக்கமும் ஒழுக்கமும் உடையவராய் இளையாத ஊக்கத்திற்கு அரியநிதர்சனமாய் விளங்கும் ஸ்காட்டைப்போலொத்தவரை வித்வான்கள்வரிசையிலன்றி பெரிய அரசர்கள், பெரிய கப்பற்றலைவர்களுடைய வகுப்பிலும் தேடிப்பிடிக்கவேண்டியதுதானென்று ஸ்காட்டைப்பற்றி உள்ளபடியே லாக்ஹார்ட் என்பவர் பிரஸ்தாபிக்கிறார். பயன்படுகைக்கும், சந்தோஷத்திற்கும், சாதனமானது உலகத்தில் தாளாண்மையின் முக்கியதையென்று தன் சொந்தக்குழந்தைகளுடைய மன

தில் அழுந்தச்செய்வதற்கு ஸ்காட் என்பவர் தானே மிக ஆவலுள்ளவராயிருந்தார். அவர் தம்முடைய குமாரர் சார்லஸ் என்பவர் கல்விபயிலும்போது அவருக்கு எழுதியதுவருமாறு:—"இவ்வுலகவாழ்க்கையில் ஒவ்வொருநிலைமையிலும் நம்மீது கடவுள் சுமத்தியிருக்கிற நிபந்தனையானது 'முயற்சி' என்பதை உன்மனதில் நான் விசேஷமாய் அழுத்தக்கூடாது. ஓர் கூலிக்காரன், சுன்னெற்றிவேர்வை சிந்தப்பாடுபட்டுச்சம்பாதிக்கிற ஆகாரமுதல், தனவான்கள் தங்கள் திமிரை நீக்கும் பொருட்டு ஆடுகிறவிளையாட்டுவரையிலும், முயற்சியின்றி எய்தத்தக்கது வேறு யாதுமின்று. கல்வியறிவுவிஷயத்திலோ, ஓர் நன்செய் வயலில் கலப்பையை முன்கூட்டி நாட்டாமற் பலனுண்டாக்க முடியாததுபோல, முயற்சியின்றி மனிதருடைய மனதிற் கல்வியை ஊன்ற முடியாது. உள்ளவாறே ஓர் பெரிய வித்தியாசம் உண்டு. என்னெனின், ஒருவன் விதைத்து மற்றொருவன் அறுக்கும்படியான தெய்வகதி அல்லது சந்தர்ப்பம் வாய்க்கலாம், ஆனால் எந்தமனிதனும் தான்கற்றகல்வியின் பயன்களை அகஸ்மாத்தாயாவது அதிர்ஷ்டக்கேட்டர்லாவது பறிகொடுக்கமாட்டான். தாராளமாயும் விஸ்தாரமாயும் சம்பாதிக்கப்பட்ட கல்வியறிவானது அனைத்தும் தன் சொந்த உபயோகத்திற்கேயாம். ஆகையால் என் அருமைமகனே, முயற்சிசெய், நேரத்தைநன்கமைப்படுத்து. இளமையில் நம்நடை எளிதிலுண்டாம். நம்மனந்திரும்பக்கூடியது. அறிவு எளிதிற் சம்பாதிக்கக்கூடியது. ஆனால் நாம் விதைக்கிற காலமாகிய இளவயதிற் சும்மாவிருந்தால் அறுக்கிறகாலமாகிய வாலிபமானது உபயோகமற்று நிந்தைக்கிடமாகும். நம்முடையவிளைவு சாவியாகிவிடும். நாம் அனுபவிக்கிறகாலமாகிய விருத்ததசையானது மரியாதைகெட்டுப் பாழாய்விடும்."

சௌத்தி என்பவர் ஸ்காட்டைப்போல மிகுந்த உழைப்பாளியாயிருந்தார். வேலை செய்வதானது அவருடைய மதத்தில் ஓர்பாகமாகச் சொல்லப்படலாம். கீழ்வரும் வாக்கியத்தை எழுதுங்கால் அவருக்குப் பத்தொன்பது வயதுதான்;—"பத்தொன்பது வயசு! நிச்சயமாய் என் ஆயுளில் நாலில் ஒருபங்கு; எவ்வளவு பெரிய பாகம் ஆய்விட்டது! அப்படிக்கிருந்தும் ஜனங்களுக்கு யாதொரு பயனும் அற்றவனாயிருக்கிறேன். தினம் ஓர் அணு கூலிக்காக காக்கையோட்

நிகிற ஒரு மட்டியானவன் மிகவும் உபயோகமுள்ள மனிதனுயிருக்கிறான். சோம்பலாய் நான் தின்னுகிற ஆகாரத்தை அவன் இரட்சிக்கிறான்.'' ஆகிலும் சௌத்தி என்பவர் பையனுயிருக்கும்போது சோம்பலாயிருந்ததில்லை. ஆனால் மிகவும் சுறுசுறுப்பான வித்தியார்த்தியாக இருந்தார். அவர் இங்கிலீஷ் பாஷையில் மிகுதியாய் வாசித்திருந்தார். டேஸோ, ஆரியஸ்டோ, ஹோமர், ஆவிட், ஆகிய கிரந்தங்களை, மொழிபெயர்ப்புகளால் நன்றாய் உணர்ந்திருந்தார். ஆகிலும் அவர் ஜன்மத்தைப் பயனற்றதாகவே உணர்ந்து ஏதாவது ஒன்றைச் செய்யத் தீர்மானித்தார். அன்று முதல் தன் ஆயுள் முடிவுவரை இடைவிடாமல் தன் வித்தியாமுயற்சியைத் தொடர்ந்து வந்தார். அவர் சொல்லுகிற வார்த்தைகளின்படி "அவரிடத்தில் கல்வியைவிட எளிமையும், எளிமையைவிட கௌர்வமும், கௌர்வத்தைவிட இன்பமும், சிறப்புற்றனவாய்"க் கல்வியில் தினமும் வளர்ந்தேறிவந்தனர்.

மனிதருடைய பழமொழிகள் அவர்கள் ஒழுக்கத்தைப் பெரும்பாலும் வெளிபிடுகின்றன. 'ஸர் வால்டர் ஸ்காட்' உடைய பழமொழியானது "ஒன்றுஞ்செய்யாமலிருக்கப்படாதென்பதே." சரித்திரக்காரராகிய ராபர்ட் ஸன் என்பவர் அவருடைய அதிபால்யமாகிய பதினைந்தாம் வயதில் கல்வியில்லாமல் வாழ்தல் மரணத்திற்குச் சமானம் என்னும் பழமொழியை அனுசரித்தார். எப்பொழுதும் வேலைசெய்யவேண்டுமென்பது 'வால்ட்டேர்' உடைய உபதேசமொழியாயிருந்தது. பிரகிருதிதத்வ சாஸ்திரியாகிய 'லேஸப்பீட்' உடைய இஷ்டமான பழமொழியாவது, இவ்வுலகின்கண் வாழ்வதானது ஆய்ந்தறிவதற்கே என்பதாம். 'பிளினி' என்பவருக்கும் அதுவே பழமொழியாயிருந்தது. போசுயட் என்பவர் கல்விச்சாலையில் வாசிக்கும்பொழுது அவர் மிகவும் சிரத்தையோடு வாசித்ததினால் அவருடைய ஸஹபாடிகள் கலப்பையில் பூட்டப்பட்ட எருதென்று அவருக்குப் பெயரிட்டுப் பரிகாசஞ் செய்தார்கள். ஸ்வேஜோபெர்க் ஆகிய ஸ்வீடிஸ்கவிஞர் பெற்ற விட்டாலிஸ் என்னும் பெயரும் பிரெடரிக், வன்ஹெர்டன்பர்க், தரித்த நாவலிஸ், என்னும் பெயரும் இந்த இரண்டுகவிகளுடைய அவாவையும் உழைப்பையுங்காட்டின.

நாம் வேலையை அப்பியாச சிக்ஷையாகப் பிரஸ்தாபித்திருக்கிறோம். அஃது ஒழுக்கத்தைக் கற்பிக்கிற போதகராயுமிருக்கின்றது. யாதொரு பயனையும் உண்டாக்காத வேலையாயிருப்பினும், அது வேலையாயிருப்பதால், நிமிஷ்ரப்பார்க்கிலும் அது மெத்த நல்லது. ஏனென்றால் அது வேலைத்திறமையைக் கற்பித்த, வெற்றி பெறத்தக்க வேலைக்குச் சாதனமாக நிற்கின்றது. வேலைசெய்யும் வழக்கமானது ஒழுங்கைக் கற்பிக்கின்றது. நேரத்தைச் சுருக்கமாய்ச் செலவிடவும் விவேகமுள்ள முன்யோஜனையோடு அதைச் செலுத்தவும் அவசியம் கற்பிக்கின்றது. இவ்வாழ்க்கையைப் பயனுள்ள தொழிற்களாற் சுபத்தும்படியான தந்திரமானது அநுபவத்தினாலடையப்படுகிறது. ஒவ்வொரு நிமிஷத்தையும் காரியத்திற்கு உபகாரபாக்கிக்கொள்ளப்படும். விட்டாற்றி நேரம் வரும்பொழுது மிகுந்த இனபத்தோடும் அநுபவிக்கப்படும்.

சோம்பேறிகள் நேரத்தைக்கொலை செய்பவர்களாய்ச் சொல்லப்படுவரேல் ஒழுங்குள்ளமனிதன் அதற்கு உயிர்கொடுத்து சன்மார்க்கப் பொருளாக ஆக்குவதாய்ச் சொல்லப்படலாம். ஆனால் அவன் அதை அறிவுள்ள ஜெந்துவாய் மட்டுமன்று மனச்சாக்ஷியுள்ள பிரத்தியேகப் பொருளாகவும் செய்கிறான். அவன் நேரங்களை உருவப்படுத்தி அவைகளுக்கு உயிரைக் கொடுக்கிறான். அதனால் அநித்தியமாய்ஓடும் சுபாவத்தையுடைய அதன் உயிர் நிலைக்கு அழிவற்றதும் ஞானசம்பந்தமுமான சுபாவத்தை அவன் அளிக்கிறான். இவ்விதமாய்ச் செலுத்தப்பட்ட முயற்சிகளை இவ்வாறு ஒழுங்குபடுத்தப் பெற்ற நன்மையையும் விசுவாசமுமான வேலைக்காரனைப் பற்றிக் காலமானது அவனிடத்திற்றங்குகிறது என்பதினும் அவன் காலத்திற்றங்குகிறான் என்பது அத்துணைப் பொருத்தமன்று. அவனுடைய தினங்களும்மாசங்களும் வருஷங்களும் அவனாற் செய்யப்பட்ட கடமைகளின் பதிவு புத்தகத்திலுள்ள, நிறுத்துக் குறிகள், பகுப்புக்குறி, களைப்போல உலகங்களின் பிரளயத்தைக் கடந்து காலமென்பது இல்லாமல் ஒழிந்தபொழுதும், நிலைத்திருக்கின்றன என்று 'காலரிட்ஜ்' என்பவர் உள்ளவாறே உரைத்திருக்கின்றனர்.

வேலையிற் பிரவிர்த்திப்பதானது ஒழுங்கை மிகவும் பயன்பெறக் கற்பிக்கிறபடியால் அது ஒழுக்கத்தைப் போதிப்பதற்கு ஓர்

போதகராய் உபயோகப்படுகின்றது. தினசரிதமான காரியங்களில் மற்றஜனங்களோடு சுறுசுறுப்புடனும் உருக்கத்துடனும் கூடுவதால், முயற்சிக்குரிய உயர்ந்த குணங்கள் சிறக்கச்சிக்ஷிக்கப் படுகின்றன. அவ்வேலையானது ஓர் குடும்பத்தை நடத்து வதைப்பற்றி யாவது அல்லது ஓர் ஜாதிஜனங்களை நடத்துவதைப் பற்றியாவது இருக்கலாம். அதனால் தோஷமின்று. உள்ளவாறே முன் அதிகாரத்தில் நாம் விளக்கியிருக்கிறபடி, திராணிபெற்ற மனையாட்டியானவள் வேலை செய்வதற்குத்தக்க ஸ்திரீயாயிருக்க வேண்டுவது அவசியம். அவள் தன் வீட்டின் ஒவ்வொரு அற்பக்காரியத்தையும் ஒழுங்குபடுத்தி ஆளவும் வரவுக்குத்தக்க செலவு செய்யவும், ஒவ்வொரு காரியத்தையும், விதிப்படியும், திட்டவொழுங்குப் படியும், அமைக்கவும், தன் அதிகாரத்திற்குட் பட்டவர்களை, விவேகத்துடன் நடத்தி ஆளவும் வேண்டும். எத்தகையவேலையையும், தக்கபடி நடத்துதற்கு, வேண்டிய முயற்சி, பிரவிர்த்தி, ஒழுங்குமுறை, சன்மார்க்கசிக்ஷை, முன் யோசனை, விவேகம் அநுபவத்திறமை, ஒழுக்க ஆராய்ச்சி, இனப்படுத்துந்திறமை ஆகிய அனைத்தும், கிருககிருத்தியத்தைத் திறமையுடன் நடத்துவதில் அடங்கியிருக்கின்றது.

உள்ளவாறே வேலையின் குணங்கள் பிரவர்த்திப்பதற்குரிய விஷயங்கள் பல உள. காரியக்குறியானது, குடும்பகாரியங்களை நடத்துவதில், ஓர் தொழிலை நடத்துவதில், வியாபாரவணிகத்தில், ஜனசங்கத்தை ஒழுங்கு படுத்துவதில், அல்லது இராஜ்யம் ஆளுவதில், நிகழ்ந்த போதிலும், வேலைக்குரிய இலட்சணங்களென்பது காரியங்களுக்குத் தகுதியுடைமை, உலகத்திற்கு வேண்டிய காரியங்களை வெற்றிபெற நடத்தத்தக்க தன்மைவாய்ந் திருத்தலாம். இன்னோரன்ன பற்பல காரியங்கள் நடத்துவதிற் சாமர்த்தியம் உண்டாக்குகிற பழக்கமானது, நம்முலக அநுபவகாரியத்தில் எல்லாவற்றினும்மிக மேலான உபயோகமுடையதாகின்றது. மேலும் அது ஒழுக்கத்தை சிக்ஷிக்கத்தக்க சிறப்புடையது. ஏனென்றால், அதற்கு ஜாக்கிரதை கவனம், தன்னயமறுப்பு, விவேகம், சாதுர்யம், பிறர்குணங்களையறிதல், அவர்களுடன் உருகுதலாகிய குணங்கள் பழக்கமாகின்றன.

அவ்விதமான சிக்ஷையானது, மிக்க கல்வி ஆராய்ச்சியாவது அல்லது தனித்திருந்து யோசித்தலாவது உண்டாக்குவதினும், அ

திகமாய்ச் சந்தோஷத்தையும் உலகத்திற்குரிய உபயோகமுள்ள சாமர்த்தியத்தையும் கொடுக்கின்றது. ஏனெனின், கடைசியில், அனுபவத்திறமையானது புத்தி தத்வத்தையும், குணமும் பழக்கங்களும், முயற்சியைச் சாமர்த்தியத்தையும் விஞ்சுதல் வழக்கமாய்க் காணப்படும். ஆகிலும், இது ஜாக்கிரதையுள்ள விசாரணையினாலும், எச்சரிக்கையுடன் திருத்திய அனுபவத்தினாலும், மாத்திரம் எய்தக்கூடிய ஓர் வகையான தேர்ச்சியாகச் சொல்லப்படவேண்டும். "சிறந்த கம்மியனாகவேண்டில், ஒருவன் தன் ஆயுசு முழுதும், சுத்தியல் கொண்டு தட்டிக்கொண்டிருத்தல் வேண்டும்; சிறந்த ராஜதந்திரக் கிழவனாயிருக்கவேண்டின் தன் ஆயுசுமுழுவதும் வேலையைச் சற்றுப்பழக்குவதிற்போக்கியிருத்தல் வேண்டும்" என்று 'ஜெனரல் டிரோச்சு' என்பவர் சமீபமாய் பிரசுரத்திருக்கின்றனர்.

வேலையிற் சிறந்த திறமையுடையோருக்கு உயர்ந்த மரியாதை புரிவது 'ஸர் வால்ட்டர் ஸ்காட்' உடைய இலக்ஷணமாயிருந்தது. கல்வித்திறமை எம்மட்டிருப்பினும் உலகானுபவத்தாலெய்திய சிறந்த வேலையின் திறமையையோ குறைந்த பக்ஷம், தேர்ந்த மானுமியின் திறமையைக்கூடக் கௌரவமாய்ப் பேசுமளவிற்குக் கல்வித்திறமை உரிமைப்படுவதாகக், தான் நினைக்கவில்லையென்று அவர் சொன்னார்.

பெரிய சேனாதிபதி, ஒன்றையும் தற்செயலுக்கு விடுவதில்லை. தற்செயலாய் நேரிடுகிற ஒவ்வொன்றிற்கும் பரிகாரம் உண்டாக்குகின்றனர். பிரத்யக்ஷமான அற்பக்காரியங்களையும் தான் நேரில் கவனிக்கிறார். இவ்வாறு 'உலிங்டன்' என்பவர் 'ஸ்பெயின்' தேசத்தில் தன் சேனைக்கு அதிபதியாயிருந்தபொழுது, தன் படைவீரர்கள் போஜன பதார்த்தங்களைச் சமைக்கவேண்டிய திட்டமான மாதிரி வைக்காட்டினர். அவர் இந்தியாவில் இருக்கும்பொழுது காளைமாடுகளை ஓட்டவேண்டிய திட்டமான வேகத்தை வரையறுத்தனர் படையெடுப்புக்கு வேண்டிய ஒவ்வொரு வஸ்துவையும் முன் கூட்டி ஜாக்கிரதையுடன் ஒழுங்குபடுத்திக் கொண்டனர். இவ்வாறு காரியம் நிறைவேறத் தகுதியுண்டானது மட்டுமின்று, அவருடைய மனிதர்களுடைய அன்பும், அவர் தலைமையாயிருத்தலில் அவர்களுடைய பூரண விசுவாசமும் அவர்பாற் சார்ந்தன.

மற்றைச் சேனாதிபதிகளைப்போல 'உவில்லிங்டன்' ஆனவர், வேலைக்குரிய சாமர்த்தியத்தை வரம்பின்றி உடைத்தாயிருந்தனர். பிராஞ்சு சேனையானது 'சூனட்' என்பவரோடு கடற்கரையிற் காத்திருந்த 'மாண்டிகோ' நதியின் முகத்துவாரத்தைத்தான் தட்டுண்டு கிடக்கையில் (ஐயர்லண்டு தேசத்திற்கு இன்றும் காரியதரிசியாயிருந்து) டப்பிலின் நகரத்தின் போலீஸ் ஜாப்தாவின் 'நபரை' க்கணக்கிட்டுக் கொண்டிருந்தார். அப்படியே வேறொருபெரிய சேனாவீரராகிய 'ஸீஸர்' என்பவர்சேனையை ஆல்ப்ஸ் பருவதத்தின்மீது கடத்திக்கொண்டிருக்கையில், லத்தீன் பாஷாவிஷயமாய் ஓர் உபந்நியாசம் எழுதிக்கொண்டிருந்ததாய்ச் சொல்லப்படுகிறது. 'வாலென்ஸ்டீன்' என்பவர் அறுபதினாயிரம் மனிதருக்குத் தலைமையாயிருந்து, தமக்கு முன்னர்ச் சத்துருவுடன் போர்க்களத் திலிருக்கையில் தம் ஆஸ்தானத்திலிருந்து கொண்டு கோழிக் கூட்டிலிருந்த கோழிகளுக்கு வைத்தியம் சொல்லிக் கொண்டிருந்தனர்.

உவாஷிங்டன் என்பவரும் வேலையில் இளையாதவராயிருந்தார். அவர்தன் சிறுவயது முதல் முயற்சி, கல்வி ஒழுங்கான வேலையாகிய பழக்கங்களில் ஜாக்கிரதையுடன் தன்னைப்பழக்கி வந்தனர். அவர் பதின்மூன்றும் வயதுமுதல், ரசீதுகள், கைச்சீட்டைகள், வட்டச்சீட்டுகள், பத்திரங்கள், உடன்படிக்கைகள், குத்தகைச் சீட்டுகள், நிலச்சன்னதுகள், பின்னும் இன்பமில்லாத பத்திரங்கள் எல்லாவற்றையும் தாமே ஜாக்கிரதையுடன் எழுதுவதில் மூண்டிருந்தார் என்பதை இன்றும் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற அவர் கையெழுத்துப் பள்ளிப் புத்தகங்களே காட்டுகின்றன. அதிபால்யத்தில் இவ்வாறு அவர் அடைந்தவழக்கங்கள் தான், பிற்காலத்தில் இராஜாங்க ஆளுகைக் காரியங்களிற் பிரயோகமாகும் வண்ணம் சித்திபெற்ற ஆச்சிரிய கரமான அவருடைய வேலைச்சாமர்த்திய இலட்சணங்களுக்கு அஸ்திபாரமாயின.

வேலையாகிய பெரியகாரியம் ஒன்றைநடத்துவதில் சித்திபெற்ற புருஷன், அல்லது ஸ்திரீ அல்லது சித்திரம்வரைகிற சித்திரக்காரன் அல்லது புஸ்தகம் எழுதுகிற ஓர் கிரந்தகர்த்தா அல்லது யுத்தத்தில் ஜெயிக்கிற ஓர் படைவீரன் எப்தும்படியான கன்யதைக்குப் பாத்தி

யப்படுகின்றனர். வெகு கஷ்டங்களையும் போராட்டங்களையும் எதிர்த்து அவர்கள் சித்திபெற்றிருக்கலாம். அவர்கள் போராடி வெற்றியடைந்த யுத்தமானது ஒருவாறு அமைதியான தொன்றும். அவர்களாற் கொலை மரணம் கிடையாது.

வேலைப்பழக்கச் சாமர்த்தியங்கள் யூகத்திற்குச் சமமாகாவெனச் சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். 'ரிச்சார்டுலொவல் எட்ஜ் வொர்த்' இன் ஜீவ்யசரித்திரத்தில் 'மிஸ்டர் பிக்னெல் என்பவரைப் பற்றிச்சொல்லியிருக்கிறது.

(இன்னும்வரும்.)

பெண் கல்வி.

(தொகுதி-ரு. பகுதி-௩௨-ல். ருருரு-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவைகட்கெல்லா மேற்றமான பக்தியும் நிட்டையுமாமிரண்டையும் நன்றாய்ப் பயிற்றவேண்டும். பள்ளியிற்பயிலும் பாவையர்க்கெல்லாம் பகவத்கீதை தெரிந்தேயிருக்க வேண்டும். ஆரியமாதர்களினுயர்ந்தவர்களின் பெயரும் அவரனுசரித்துள்ள தருமநிஷ்டையும் பேரறிவிற் கேதுவாம். அம்மகாத்துமாக்களினாசாரத்தை அவரதுசரித்திரமூலமாய் மூர்த்திகரித்தெதிரில்நிற்கும்படி போதிக்க வேண்டும். இத்தகைய மனத்தெளிவும் திவ்வியசரித்திரங்களாற்றேர்ந்து தெளிந்து நிறைந்துள்ள புத்தியுமுள்ள பெண் இல்லத்திற் கோரிலக்குமிபோலாகின்றனள். அத்தகையாளது கணவனும் மக்களுமே அவண்மாட்டுண்மையான உவப்புள்ளவராவர். இவ்வண்ணந் திருத்தப்பெற்றவளே ஆரியகுடும்பத்தை அதற்கேற்றவுயர் நிலைமைக்குக்கொணர்பவள். அஃதென்னெனின்; ஆரியகிருகத்தைப் பிர்ம்மஞானத்திற் கிருப்பிடமாகவும் ஆரியதருமத்திற்காதாரமாகவும் புரிகுவளென்பதே. அன்னேரிடம் ஆதிகாலத்திருந்த ஆரியர்களின் பெரும்பேறு மறுபடியும் அதர்வினுய்ச்செல்லும். அவர்களில் சீதாபிராட்டியின் காருண்யமும் சாவித்திரியின்பாதிவிர்த்தியமும்

கார்க்கியின் புத்திசாமர்த்தியமும் மயித்திரேயியின் ஸகலஸங்கபரித்தியாக பூர்வகமான ஞானசம்பத்தும் உண்டாவதை நாங் காணலாம்.”

இதனால், அம்மாதரசி தாராளமனத்துடன் நம்மாட்டுவைத்துள்ள அன்பும் பச்சாத்தாபமும் நன்குவெளிப்படுகின்றனவன்றோ. அவர் இவ்வுபந்நியாசத்திலாங்காங்குநம்தேயம், நம்மவரென்பதும் வியக்கத்தக்கதன்றோ. இத்தேயத்தில் அங்கங்கே சற்றேறக்குறைய முப்பதுவருஷகாலமாய்ப் பெண்பாடசாலைகளேற்பட்டுள்ளன. அவற்றிற்படிப்பவர் யௌவனபர்வம் வந்தபின் அங்குச்செல்வதில்லை. ஆனதினாலேதான் அனிபெஸெண்டென்பவர் ஆரியப்பெண்கள் கல்விச்சாலையிலோதுங்காலம் கொஞ்சமெனக் கூறியுள்ளார். அதற்குள் அவர்கள் தம்பாஷையை நன்றாய்ப்படிக்கவும் உசிதமானகணக்கு தையல்வேலைமுதலியசெய்யவும் தெரிந்துகொள்கின்றனர். பின்பு சாங்கற்ற கல்வியை மனைக்குள்ளிருந்தே விருத்திசெய்துகொள்கின்றனர். வேண்டுமேல்அவர்க்குக்கணவனாயினும் தந்தை உடன்பிறந்தோர்களாயினும் உதவிபுரியலாம். இதுகாறும் இத்தேயத்திலெங்கணும் பெண்கல்வி பெரும்பாலும் இங்ஙனமே நடந்துகொண்டிருக்கின்றது. இஃதெல்லோர்க்குந் தெரிந்தவிடயமே.

இங்ஙனமின்றி இருடிகண் மனத்தையும் ஈர்க்கத்தக்க யௌவ்வனம்வாய்ந்தபின் பள்ளிக்குச்சென்று பரபுருடர்பால் பாஷாந்தரம்பயின்று இனியபெரியபட்டப்பரீக்ஷையிற்றேறுவதிற் பயனென்ன? சிலர் அங்ஙனந்தேறுபவர் பெண்பள்ளிக்கூடத்திற்குப் பெண்களே போதகாசிரியராகக் கூடுமன்றோ என்கின்றனர்? பந்தியில் வேண்டாமென்றால் இலைபொத்தல், என்பதுபோல் இந்துமாதர்கட்கு ஆங்கிலபாஷையே அநாவசியமென்றால் அதைப்போதிப்பவரெதற்கோ! அதையுமொத்துக்கொள்ளலாம்; அப்படிப் படித்துத்தேறுபவர் ஆரம்பத்திலதிகமிலரேனும் வரவர அதிகமாய்விடின்; எல்லோர்க்கும் உபாத்தியாயர் தொழில் எப்படிக்கிடைக்கும்? அப்புறம் மேனாட்டுமங்கையரைப்போல் இராசாங்க உத்தியோகத்திற்கும் போராடவேண்டியதுதான். இப்போது படித்துத்தேறியுள்ள புருஷசிங்கங்கட்கே வேலைகப்படாமல் திண்டாடவேண்டியிருக்கிறது. இனிப்பெண்சிங்கங்களுந் தலைப்பட்டால் பரதகண்டமும் ஐரோப்பைப்போலாக வேண்டியதுதான்.

இப்போதே இங்கிலீஷிற்றேறியுள்ள சிலசுந்தரிகள் ஆண்பாலாரென்ன வுயர்ந்தவர்? யாமென்ன தாழ்ந்துளோம்? படித்துத்தேறியுள்ளாளெங்கட்குமேன் சர்க்காருத்தியோகந்தரக்கூடாது? அங்ஙனமாயின் எங்களுக்கேனிங்கிலீஷைப்படிப்பிக்க வேண்டுமெனப் பத்திரிகைமூலமாய்ச் சாடுகின்றனராம். ஆம்; அவர்கேட்பது ஞாயமே. தேளுக்கதிகாரங்கொடுத்தால் நாழிகைக்கொருதரங்கொட்டுகிறது. அவர்மேலென்னகுற்றம்? இப்பொழுது சிலவிடங்களில் உயர்தரக்கல்விச்சாலையில் சிலயுவதிகள் பாஷாந்தரம் பயில்கின்றனர். அவர்க்கு யுவாக்களும் போதிக்கின்றனர். இத்தேயத்திற் சிலபகுப்பார் தம்மாதர்களைப்பரபுருடர்பார்க்கொணாதென்று மறைவாகவைத்துக் கொண்டாடிக் கொண்டிருப்பது யாவர்க்குந்தெரிந்தவிஷயமே. அவரங்ஙனமிருப்பதறிந்தும் இவர் இதரபுருடருடனெக்காலும் பேதமின்றியுங் கூச்சமின்றியும் பழகுவது ஞாயமாகுமா? ஆனாலென்ன? கலாசாலைக்கண் ணொருவரோடொருவர் பயில்வதாலென்ன கெடுதியாமென்று செப்பக்கூடும். அங்ஙனஞ்சொல்பவர் முன்சொன்ன கோஷாஞாயங்கொண்டாடுபவரையுசாவினால் நன்குபுலப்படும். பலநாளைப்பழக்கம் வேரூன்றத்தக்க அன்புக்கேதுவாகின்றது. அன்பென்பதொன்றேயாயினும் அது இடவகையால் பேதமுறுகின்றது. ஒருவன் தன்மனைவியிடத்தும் பெண்ணிடத்தும் வைக்குமன்பு பேதப்படுவதை யார்தாமறியார்? இது தக்கதன்றென்பதற்கு அநுபவத்தாலும் நூன்முறையாலும் எவ்வளவோசொல்லலாம். அதையிங்குவிரிப்பிற்பெருகும். "பழக்கங்கொடியது பார்பாறையினைக் கோழிகிழிக்கும்" என்றும் "வல்லியுந்தனக்கருகிலுள்ள மரத்தையே தாவிப்படரும்" என்றும் "ஸம்ஸர்க்கஜா தோஷகுணாபவந்தி" என்றும் புகல்வது பொய்படுமா? இவர்க்கிசைந்துள்ளது எப்பாவத்தையும் இயற்றுதற்கிடமான யௌவனபர்வம். ஆழ்வாரும் அதை வாயாற்புகலமனமின்றிப் "பேதைபாலகனதாகும்" என்றனரே! அன்றியும், பார்த்ருஹரிமுதலான கவிஞர்களும் அதைப்பழித்திருப்பதை நன்குகாணலாம்.

பண்ணுவதோ நெடுநாளைப்பழக்கம்; படிப்பது சிங்காரச்சுவைமுதலிய நவரஸநிரம்பிய கருத்தைக்கவராநிற்ற காப்பியமாதியான அழகிய கிரந்தங்கள். இங்ஙனமிருக்க அஃதெங்ஙனமொல்லும்? இந்

னால் இவரெல்லோருங்கெடுகிறாரென யானியம்பவில்லை. இதயத்
தைவிழுக்கற்பால இப்பழக்கத்தினின்றும் மனக்குற்றமாவதின்றித்
தப்புவது கராவின்வாய்ப்பட்டவன் தப்பிப்பிழைப்பதுபோற் கடின
மென்கின்றேன். “கர்ஷதி கர்ஷதி கர்ஷத்யேவ வித்வாஸமபிகர்ஷ
தி” என்பதுமிங்குகருதற்பாலது. “அங்கனைமார்கட்கெல்லாமழகி
யதனபன்றங்கை, தங்களோடுடன்பிறந்தாளாயினுமிவரைத்தங்கள்,
கண்களினெதிரிற்காணிற்காமத்தாற்கருத்துமாழ்கி, யங்கவரோடும
ன்றவுருதமென்றறிகமாலே” என்று ஐவருளொருத்தியாகிய வை
வர்க்குந்தேவி யைபாயுதன்பாலேந்தாவது ஆரணத்தறைந்துள்ள
தை யார்தாமறியார்? “வாதாம்புசருகயின்றானை முழுந்தகௌசிகனே
முதலோர்வைப்பிற், போதாருங்கோதையர்கள் பூண்முலைக்கண்வீழ்ந்
தனரேபொங்குநெய்யான், மீதாருந்தயிர்மிடைந்த சாலியனமிசைப
வருங்காம நீப்பி, னேதாகாதாழியிடைவிந்தியமுமிதக்குமெனவியம்
பளாமே” என்னுமிதனையுங்காண்க.

அற்பஞானமுள்ள யானே இத்தகையஞாயங்கள் எவ்வளவோ
இயம்புவேன். பலபகர்வதிற்பயனென்ன? வயதுவந்தகுலப்பெண்
கள் அநேகர் இப்படிப்பிதரபுருடர்பாற்பயிலுமாறுதமதகத் தார்விட்டி
ருக்கின்றனரே? இங்ஙனம் நம்மங்கையரும் கற்குமாறு கருதுவமா
வென்று எனக்குள்ளொரு சமயத்தில்யோசித்தால், அடேயப்பா! இ
தற்கோடிபொன்வருவதாயினும் நமக்குவேண்டுவதின்று. நம்ம
டந்தையரையுமொருவன் கண்ணுறக்கண்டு வாய்கொண்டுபேசக்கூடு
மாவென வென்மனம் என்னைபிடிக்குத்துடிக்கின்றது.

சிலர் எது எங்ஙனமாயினுமாகுக. நம்வனிதையர்கள் படித்து
ப்பரீக்ஷைபிற்றேறிப் பணங்கொணர்ந்தாற்போதும்; நாம் வறுமையி
னுழலாது சுகித்திருக்கலாமென நினைத்தலுங்கூடும். பெண்டுகள் பு
ருடர்களுக்கடங்கி யொழுகுவதற்கு இரண்டுகாரணமுண்டு. ஒன்று,
தாமியற்கையாகவே பலபராக்கிரமங்களில் அவரினுங்குறைந்துள்ள
து. மற்றொன்று, ஜீவனத்திற்காக ஆடவருதவியையெதிர்பார்ப்பது.
இதனால் பொருள்தேடும்பொறுப்பும் அதைப்போற்றித்தக்கவாறு
செலவிடுவதின் கடமையும் ஆண்பாலார்க்கேயன்றி அவர்க்கில்லையெ
ன்பதுதிண்ணம். அது பெண்களுக்குமேல் உரித்தாகாதெனின்,

அவர்மாட்டஃதிருப்பின் பெருங்கேட்டிற் கேதுவாமென்றதானே,
"பிதாரக்ஷதிகௌமாரே"யென்னும் சுலோகத்தின்படி பெண்களுக்கு
ச்சுதந்தரங்கூடாதெனத் தருமநூல்கண்டித்துவிட்டது. தேகபலத்
தினும் அர்த்தபலமேபெரிதென்பது யாவர்க்குந்தெரிந்ததே. "எல்
லாக் குணங்களும் இரணியத்தை தபியைந்தன" என்றும் "பணமில்லா
தவன்பிணம்" என்றும் "குன்றேறியானைப்போர் கண்டற்றாற்றன்
கைத்தொன் - றுண்டாகச்செய்வான்வினை" என்றும் வழங்குகின்றனர்.
எண்சாணுடம்பி லொருசாண்வயிறின்றேல், யாரை யார்தாம் மதிப்
பர்? அங்ஙனம் தோட்டியுமொன்று, தொண்டைமானுமொன்றே.
நிலவுலகத்தின்கண் நீதியும் நிருபணையு மெதனானே நடக்கின்றன?
அத்தகைய அதிகாரம் அங்கனைமார்க்காகாதென்பதினாலேயே. "தந்
தேட்டமுத்தமமாந் தந்தையதுமத்திமமாம், வந்தோனதுவுடனே
வையத்ததமமென்ப, கொந்தாரும் பூங்குழலார்க் குற்றகொடுந்தன
மே, யந்தோபெரிது மதமாதமமாமே, என்று நூல்நுவல்கின்றது.

அவர்கைமேலும் இவர்கைகீழுமாய் வாழுமொருவாழ்வும் இல்
வாழ்வாமோ? அங்ஙனம் கொம்பனையார்க்குப்பயந்து தானே கொ
ண்கனொழுகவேண்டும்? "மனையாளையஞ்சு மறுமையி லாளன் - வினை
யாண்மைவீறெய்தலின்று" என்றும் "நட்டார்குறைமுடியார் நன்றா
ற்றார்நன்னுதலாள் - பெட்டாங்கொழுகுபவர்" என்றும்பெரியோர்
மொழிந்தபடி இம்மைமறுமைக்குச்சாதனமான எந்தக்கருமந்தான்
அவனாலிழைக்கமுடியும்? இப்பரதகண்டத்தின்கண் அநாதியாய் நி
லைபெற்றொளிரும் நமது வைதிகமதமானது, இம்மைமறுமைவீடெ
ன்னு மூன்றையும் முறைபிறழாது விளக்குவதாகியும், இவற்றுட்
பேரின்பம்பயக்கத்தக்கதாயவீடே அழியாச்செல்வம்: மற்ற அற்பசு
கம் அளிக்கற்பாலனவாய அயன்பதவிமுதலியயாவும் அழிதன்மா
லையனவாதலால் பெறற்கரியமனிதப்பிறவிவாய்ந்தவன் முத்திச்செல்
வத்தையே முக்கியமாக்கொண்டு அதற்குவிரோதமின்றி மற்றச்செ
ல்வங்களையுமடைந்து அதுகெடவரின் இவற்றைநீத்து அதனையேமு
யலவேண்டுமென, நாஸ்திகனும்பொருமையைத்தணந்து நிதானித்
துநன்காராய்ந்துபார்ப்பின் அச்சிற்றின்பங்களை வெறுக்கும்படிதுலக்
குவதாயும், ஆகையால், புத்தியிற்சிறந்த அந்நியமதஸ்தரும் தன்பெரு

மையையுணர்ந்துகாதலிக்குமாறு தீபாந்தரங்களிலும் பரவலுற்றதாயும், தனக்கொருதாயின்றிப் பலவற்றிற்குந் தானொருதாயாகியும், பலசமயங்களிற் பரசமயங்களாகிய பலயானைகள் தன்னையழிக்கப்பொருதிடினும் அவற்றிற்குச்சற்றுஞ்சலியாத பருப்பதமாகியும் வீற்றிருப்பது. இதற்கு நம்மவரேதீங்கிழைக்கவெத்தனிப்பது இதரர்கள்பரிகசிப்பதற்கிடமாகுமன்றோ? ஒருவன்கைகால்கள்முறிந்தால் காயத்தையாற்றிக்கொண்டு மொண்டியாகவாவதுயிர் வாழ்ந்திருக்கலாம்; கந்தரமேமுறிந்தாலென்செய்வது? நமதுமதத்திற்காதாரமாவன வர்ணாச்ரமதர்மம், ஆண் பெண் வரையறையாகுமிவ்விரண்டுமே. இவைகுலைந்தால் கந்தரம்முறிந்த கதையேயாகின்றது.

சாதிபேதமதபேதமுதலிய பேதங்களாலேயே நமது தேசங்கெடுகின்றது; எல்லோருமொன்றாய்விடின் நாமேசுயராஜ்யம் பண்ணலாமென்கிற மனோராஜ்யமாளுகிற சிலர்க்குப் பதில் இன்னொருசமயத்தியம்புவன். இங்ஙனம் பெண்கல்விவிடயமாய்ப்பேசுவதால், நான்சொல்வது, நங்கன்னிகையர் பூப்பதற்குமுன்னரே பள்ளிக்குச் செல்லவேண்டும், அதற்குள் தஞ்சுயபாஷையை நன்குபடிக்கவும் எழுதவும் பழக்கிக்கொள்ளவேண்டும். யுவதிகளானபின் பரபுருடர்பாற்பயில்வதும் இங்கிலீஷ்படித்துப்பரீக்ஷைக்குப்போவதும் பெண்டுகள்பணச்சம்பாதிப்பதும் நம்மானத்திற்கும் மதாசாரத்திற்குங்குறைவாகையால் அவற்றைவிடவேண்டுமென்பதே.

மதாபிமானியாகியயான், அவ்வபிமானத்தானே வரைந்துள்ளவிதன்கண்ணேதேனும் தவறுறுமேல், அதைப்பாராட்டாது புந்தியிற்சிறந்தபெரியோர் பொறுப்பாராக.

> வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
> மாட்சியின் மாசற்றார் கோள்.

இங்ஙனம்

கோ. வ. ஸ்ரீநிவாஸாசாரியன்,

தமிழ்ப்பண்டிதன், மைசூர்

உ

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராண அரும்பதவிளக்கம்.

[பழையஏட்டினின்று எடுக்கப்பெற்றது.]

(முற்றொடர்ச்சி)

கண்ணப்பநாயனர் புராணம்.

(கசரு) மிருகங்களின் கொழுப்பைக் கூரிய அலகையுடைய அம்பால் ஆழமாகக்கொத்தியரிந்து வந்தவற்றைக்கொண்டு. வதக்குதல் வக்குதலென்றாயிற்று.

(கசசு) நுதியையுடையஅம்பால். அழித்தல் - துண்டாக்குல். வகுத்தல் - கீறல்.

(கசஎ) எரி எழுவாய்.

(கருo) இவையிற்றில் - இவைகளில்.

(கருஉ) எல்லாவகையானும் வேறுபடுத்தித்தோன்றும்வழியானது தங்கள்குறிப்பின்படியே வாராமையாற் கைவிட்டார்.

(கருச) இன்பமிக்கதரிசனவேதியால் இரும்புபொன்னாற்போலச் சரீரத்தின்றன்மையும் இருவினையும் அநாதிபோபந்தித்தமும் மலங்களும்நீங்க, அன்புபிழம்பாய்த்திரிபவர், அவ்வேடர்களுடைய எண்ணத்தின் அளவினரா. போல அற எனமுடிக்க.

(கருஅ) மலையிலவன்வந்துசெய்யும் பூசைக்குமுன்னே என்மீதுநீயிட்ட அரும்பாயிருந்தலர்ந்த மிருதுவானபழைய பூக்களைநீக்குமன்பால்விரும்புகின்ற அன்பெனும்வெள்ளக் கால்பெருகியதுபோல வீழ்ந்தசெருப்படியானது அந்த இளம்பருவத்தையுடைய நமதுகுமாரனாகிய சுப்பிரமணியனுடைய அடியினும்பார்க்கச் சிறப்புடையது அரும்பும் மென்மலரும் எனினுமமையும்.

(கருகூ) முகம் - இடம். சந்தமுனிவனது செவியானதுமிழ்ந்த கங்கைமுதலியதிரைபொருகின்ற தீர்த்தநீரினும்பார்க்க.

(௧௬௦) உண்மைமலருகின்ற அரும்புமேலேவிரிந்தனபோலவீழ்தலால்.

(௧௬௧) வெய்யகனலிற்பதம்பொருந்த வெந்ததோ எனுமன்பால்வருந்தும் மனத்தால் இனிமையோடு தசைகையும்படி மிகவும்மெல்லுதலால்.

(௧௬௨) எனக்கு அவனுடைய அன்பு இருக்குந்தன்மைகளையெல்லாம்.

(௧௬௭) சென்னிஏறுகாண்மலரும் - சிரசிலே, உயர்ச்சிபொருந்தியபுதிய பூக்களையும். அணையாநின்றார் - அணைகின்றார். வந்து அணுக.

(௧௬௮) கூட்டமான பலசகுனமெல்லாந் தீங்கைக்காட்ட, இந்தத்தகுந்தகொடியபுட்களெல்லாம், நெருங்க, இரத்தக்குறியைக்காட்டும். காட்டும் என்பதுமுற்று.

(௧௭௪) கண்டவண்ணம் - கண்டவண்ணமே.

(௧௭௫) பொன் - பொற்கொடிகள்; அழகுமாம்.

(௧௭௭) ஊனுக்குற்றநோய்தீர்ப்பது ஊனெனுமுன்னுணர்கண்டார்.

(௧௭௮) தங்கண் - தங்கண்ணை.

(௧௭௯) ஏறப்பாய்ந்தார் - துள்ளிப்பாய்ந்தார். ஏற - உயர.

(௧௮௦) வேடர்குலஞ்செய்தபெரியதவத்தால்வந்து, அநுசரிப்பாயதேவரினும் மேற்பட்ட திண்ணனார்கண்டார்.

(௧௮௧) கண்ணொன்று - கண்களிலொன்று. புண்ணனது குருமிரத்தம்.

(௧௮௨) காணுகின்ற குறிப்பை எண்ணுவராய்.

(க௮௩) சிவபிரான் திருக்கையானது இடக்குங்கையைத்தடுக்க, சர்ப்பகங்கணத்தையணிந்த சிவனுடைய அமுதம்போன்றவாக்கு மூன்றுதரம்கண்ணப்ப நிற்கவென்றது.

(க௮௪) வளர் - கற்பகவிருக்ஷம்.

(க௮௫) வலத்தில் - வலப்பக்கத்தே.

(இன்னும்வரும்.)

ஜி. சதாசிவப்பிள்ளை.
நாகை "நீலலோசனி" ப்பத்திராதிபர்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்கட்குப் பத்திராசிரியர் உத்திரவாதி யல்லர்.]

தமிழ்ச்சொல் விளக்கம்.*

தமிழென்னுஞ் சொல் எவ்வாறுண்டாயது என்பதைப்பற்றி என்னுளியன்றவரையில் விளக்குகின்றேனாக. அதனை யித்தமிழ்ச் சங்கத்தறிஞர்கள் ஆழ்ந்து நுணுகி ஆராய்தலை மேற்கொள்ளவேண்டும்.

தமிழென்னுஞ் சொல்வந்த காரணம் தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர் ஒருவரும் கூறிற்றிலர்; பிற்காலத்துப் புலவர் சுப்பிரமணியதீட்சிதர் திரமிளமென்பது தமிழாயிற்றென்பர். அதன் பொருள் கூறிற்றிலர்.

சேலம் அமிர்தம்பிள்ளையவர்கள் தமம் + இல் என்னும் இரண்டு சொல் தமிழெனச்சிதைந்து இருளில்லாதது என்னும் பொருள்தருவதென்பர்.

ஆறுமுகநாவலர் திராவிடமென்பது தமிழாயிற்றென்பர்.

---

* இவ்வியாசம், இச்சங்கத்தின் ஆறும் வருஷோத்சவகாலத்தே கூடிய மகாசபையிற் படிக்கப்பெற்றது.

இராமலிங்கபிள்ளையவர்கள் தமிழென்பதைத்+அ+ம்+இ+ழ் என ஐந்தெழுத்தாகப்பிரித்துப் பெரும்பொருள் கூறுவர்.

சபாபதிநாவலர் முதலோர் தமிழ் இனிமையாதலால் அது பண்பாகுபெயராய் மொழியையுணர்த்திற்று என்பர். மொழி = பாஷை.

பேறை செகநாதப்பிள்ளையவர்கள் தமம் ஒளி ஆதலால் அது தமிழெனத் திரிந்து ஒளியுடையதென்னும் பொருள்தருவதென்பர்.

திருமணம் - செல்வகேசவராய முதலியார் தமிழென்னும் பெயர் வந்த காரணம் அறிவது எளிதான காரியம் அன்றென்பர்.

ஆப்பர்ட்டு என்னும் ஆங்கில பண்டிதர் மள்ளரென்னும் ஓர்சாதியார் தமிழராதலால் அது திருஎன்னும் அடைமொழிபெற்றுத்திருமள்ளம் என நின்று அது திரமிளமாய் அது தமிழாயிற்றென்பர்.

சோதிடநூல்வல்லார் தமிழ்க்குரியோன் சந்திரனாதலின் சந்திரனை யுணர்த்தும் தமம் என்பது தமிழாயிற்றென்பர்.

சிவனடியார்கள் தமரம் உடுக்கையாதலால் அது தமிழெனத்திரிந்து சிவபெருமானது உடுக்கையிற் பிறந்ததென்னும் பொருள்தருவதென்பர்.

வைதிகர்கள் தமம் யாகசாலையாதலால் அது தமிழாயிற்றென்று கூறி முனிவரது யாகத்திற் பிறந்ததென்பர்.

தமிழபிமானிகள் தமம் வெற்றியாதலால் அது தமிழாயிற்றென்றுகூறி ஆரியமொழியை வெற்றிகொண்டதென்பர். அரசாட்சியையுணர்த்தும் தமம் என்பதும் தமிழாயிற்றென்பர்.

திணைவல்லார் தாமம் என்பது மலைக்கொருபெயராதலால் அது தமிழெனத்திரிந்து குறிஞ்சித்திணையி லுண்டாயதென்னும் பொருள் தருவதென்பர்.

தாமம் நகரமாதலால் அது தமிழெனத்திரிந்து மருதத்திணையில் வளர்ந்ததென்னும் பொருள் தருவதென்பர்.

தாமம் கொன்றை யாதலால் அது தமிழாய்க் கொன்றையந்தீங்குழல்போல் இன்பந்தருவதென்பர்.

இவையெல்லாம் பொருந்தக்கூறலென்னும் உத்தியாம். இலக்கணமுறையாற் கூறுகின்றமையின் குற்றமாகாது. ஒரோவொன்று குற்றமாதலுமுண்டு.

இனி ஆரியரும் ஆரியநூல் பயின்றாரும் திராவிடமென்னுஞ் சொல்லே திரவிடம்—திரவிளம்—திரமிளம்—தமிளம்—தமிள்—தமிழ் என வழிவழித் திரிந்ததென்பர்.

இவ்வாறு சொற்கள் திரிந்து வருவது வழக்கே. ஆஸ்விசமுதலிய சொற்கள் ஐப்பசிமுதலியனவாகத் திரிந்து வந்தன எனின் எவ்வாறு மறுத்தல்கூடும். அஸ்வனிநட்சத்திரத்தில் சூரியன் வரலால் அது ஆஸ்விசமாயிற்று. ஐப்பசி-ஆஸ்விசமாயிற்றெனின் பொருந்தாது.

ஆயின் தமிழென்னுஞ் சொல் இச்சிதைவுபோன்றதோ வேறுபட்டதோ என்பதைமாத்திரம் ஆராய்தல் வேண்டும். திராஎன்னுந் தாதுவிற்கு ஓடிவளைதலென்னும் பொருளுண்மையால் அத்தாதுவினின்று திராவிடமென்னுஞ் சொல்பிறந்து அதுதமிழெனத்திரிந்ததெனின் அத்தமிழென்னுஞ் சொல்லுக்கும் ஓடிவளைந்ததென்னும் பொருளேயாம். தமிழ் பண்பாகுபெயர் முதலியனவாய் மொழியையுணர்த்தி அதுதிராவிடமெனத்திரிந்ததெனின் அத்திராவிடமென்னுஞ் சொல்லுக்கும் இனிமைமுதலிய பொருளேயாம். இதனுல் ஓடிவளைதலென்னும் பொருளில்வரும் திராவிடமென்னுஞ் சொல்வேறென்பதும் இனிமைமுதலிய பொருளில் வரும் திராவிடமென்னுஞ்சொல் வேறென்பதுந் தெளிதல்வேண்டும். இனிமைமுதலிய பொருளில்வரும் திராவிடமென்பது தமிழென்பதே திராவிடமாயிற்றென்பார் கூற்று.

ஓர்தாதுவில் பலசொற்கள் பிறக்கும்; தாதுஎன்னும் விவகாரமேபிற்காலத்துண்டாயது, ஆதலின் திராவிடம்-தமிழாயிற்றென்பது பொருந்தாது, என்னெனில் தமிழென்னுஞ்சொல் மிகப்பழமையது, அதுபின்னர்க்காண்க.

தமிழினின்று பிரிந்த பஞ்சத்திராவிடம் தமிழிற்கு வழிவழி வேறுபட்டிருப்பதைத்தமிழ்ச்சொல்லினின்று வழிவழிவேறுபட்ட அத்திராவிடமென்னுஞ்சொல்தானே விளக்குகின்றது.

தமிழினின்றுபிரிந்தபஞ்சத்திராவிடம் தமிழிற்குவழிவழியியைபுபெற்றிருப்பதைத் தமிழ்ச்சொல்லினின்று வழிவழியியைபு பெற்ற அத்திராவிடமென்னுஞ் சொல்தானே விளக்குகின்றது.

இதனால் திராஎன்னுந் தாதுவிற்பிறந்த திராவிடத்துக்கும் தமிழ் மொழியையுணர்த்தும் தமிழிற்கும் சொல்லாலியைபன்றிப் பொருளாலியைபின்மை காண்க. திராவிடமென்பது தமிழாயிற்றெனின், திராவிடமொழிகளினின்றே தமிழ்மொழியும் உண்டாயிருத்தல் வேண்டும். அதுநாவினியற்கை நிகழ்ச்சிக்கு மாறுபாடாகின்றது .ஓசைநூன் முறைமைக்கும் மாறுபாடாம் .ஓசைநூல்மொழியியல் பாஷாசாஸ்திரமென்பன ஒருபொருட்கிளவி.

தமிள் தமிளம் த்ரமிளம் த்ரவிளம் த்ரவிடம் என்பன தம்முள் ஒன்றற்கொன்று வேறுபாடுண்மையும் இயைபுண்மையும் காண்க.

திராவிடமென்னுஞ்சொல் வடமொழியிலும் பண்டைநூல்களில் இல்லையென்பார்கள். காமிகாகமத்தில் அர்ச்சனைவிதிப்படலத்தில் திராவிடமென்னுஞ்சொல் வருகின்றதெனின் சைவாகமங்கள் வைதர்ப்பநெறியுடையன வாகலின் அவையும் பண்டைநூலாகா என்பர்.

திராவிடமென்னுஞ்சொல் வடமொழியில் இரண்டாயிரவருடத்தின்முன் உச்சயினிபுரத்தில் இயற்றியாடிய ஓர்நாடகத்தில் முதல் முதல் எடுத்தாளப்பட்டதென்பதும் பிறவும் கூறுவர்.

தாமம் என்பது சூரியனாகலின் அத்தாமம் என்னுஞ்சொல் இறுதியில் லகரமெய்பெற்றுத் தமிலெனத்திரிந்து சூரியனாலாகிய மொழியென்னும் பொருள்தரற்பாலது. சூரியன் கோள்களுக்கெல்லாம் நடுநிற்றலின் சூரியனையுணர்த்தும் தாமம் என்னுஞ் சொல்லுக்கும் அப்பொருள்கொண்டு உலகத்துக்கு நடுமையமாகிய குன்றநாட்டில் உண்டாகிய மொழியெனலும் பொருந்தும். குன்றநாடுமுதலியன கடல்கோட்பட்டன.

முதற்றிசையாகிய கிழக்குத்திசை நோக்குங்கால் பிங்கலையில் நிற்பது தென்றிசையாகலின் தென்றிசையிலிருந்துண்டாகிய மொழியெனலும் பொருந்தும். பிங்கலையெனினும் சூரியகலையெனினும் ஒக்

கும். இடைகலையினிற்பது வடதிசையாகலின் அது மதித்திசையாயிற்று. நிகண்டுநூலுடையார் வடதிசையை மதித்திசையென்பர். தமிழர் முதல்முதல் சூரியசமயத்திலிருந்து சிவத்தைப்பேணிய சௌரமானிகளாகலின் சௌரமான மொழியெனலும் பொருந்தும். சௌரமானிகளுக்கு நட்சத்திரம்முக்கியம்; சாந்திரமானிகளுக்கு திதிமுக்கியம்.

தமிழ்மொழி சூரியனலாகிய ஓர்வியாபக இயற்கைத்தாதுவினின்றே ஒன்றிலிருந்தொன்று அநுசூதசம்பந்தம்பெற்று உண்டாயினமையின் சூரியனையுணர்த்தும் தாமம்என்பது தமிலெனத்திரிந்ததெனலே உண்மைகூறலென்னும் உத்தியாம். ஆயின் சத்தத்துவசூடாமணியென்னும் மொழியியலை முற்றும் ஆராய்ந்தார்க்கல்லது இவ்வுண்மை புலப்படாது.

தாமம்—ஒளி; அது சூரியன்மேனின்றது.

தாமம்என்னும் இயற்கையோசைஆரியத்தில் யா௨௦ எனச் செயற்கையோசையாயிற்று. இயற்கையினின்றே செயற்கையுண்டாவது. தெலுங்குமுதலிய மொழிகளிலுள்ள ஒத்தெழுத்தெல்லாம் செயற்கையோசையாம். அதாவது பிற்காலத்துண்டாயதென்பது. ஆரியரும் ஐந்துவர்க்கங்கள் ஒவ்வொன்றிலும் இயற்கையோசையே முற்கூறுவர்.

சிலசொற்களின் இறுதியில் லகரமெய் வந்தணுகுவது ஓசைநூலிலக்கண முறைமையாம்.

உதாரணம்.

௧.	பக்கம்	—	பக்கல்
௨.	சுண்டி	—	சுண்டில். = தொட்டால்வாடி
௩.	வண்டி	—	வண்டில்.
௪.	நெருஞ்சி	—	நெருஞ்சில்
௫.	மருங்கு	—	மருங்குல் = பக்கம்
௬.	நித்தம்	—	நித்தல்

௭.	தெப்பம்	—	தெப்பல்
௮.	ஆயம் (மகளிர்கூட்டம்)		ஆயல் = மகளிர்கூட்டம்
௯.	ஏழ்	—	ஏழில் = யாழ், ஏழ்நரம்புள்ளது
௧௦.	கூவம்	—	கூவல் = கிணறு
௧௧.	அரி	—	அரில் = மூங்கில்
௧௨.	வெடி	—	வெடில்
௧௩.	அல்லம்	—	அல்லல் = துன்பம்
		(துன்பம்)	அல்ல கண்டம் 2—பதம்
௧௪.	மாஞ்சி	—	மாஞ்சில் = சடாமாஞ்சி
௧௫.	மா	(அளவு)	மால்—அளத்தற்கருவி

என்பனபோலத்தாமம் என்பதுஇறுதியில் லகரமெய்பெற்றுத் தமிலெனத்திரிந்தது. இத்தமிலென்னும் வழக்கே பல்லாயிரவாண்டிருந்திருக்கலாம்:

௧.	பஞ்சல்	—	பஞ்சள்.
௨.	மதில்	—	மதிள்.
௩.	சொல் (கள்)	—	சொள் = கள்ளின தொழுக்கு
௪.	பெருமால்	—	பெருமாள்.
௫.	பல் (இசை)	—	பள் = இசை.

பல்லியம் - பல் + இயம், ௨ - பதம்.

என்பன போலத் தமில்என்பது தமிள் எனத்திரிந்தது. லகரம் ளகரமாயிற்றென்பது; இத்தமிளென்னும் வழக்கும் பல்லாயிரவாண்டிருந்திருக்கலாம்; பிறவும் அன்ன. வங்காளத்துக்கு வடக்கும் நேபாளத்துக்குக் கிழக்கும் திமல் என்னும் ஓர் சாதியார் வசிக்கின்றரென்றும் அவர் தம்மொழி தமிழ்க்குப் பலவாறு ஒத்துள்ளதென்றும் கனகசபைபிள்ளையவர்கள் கூறுவர். அத்திமல் என்னுஞ்சொல் தமில் என்பதன் திரிபாகின்றது. அவரும் திமலென்பதனால் தமிலென்னும் வழக்குமிருந்ததென்பர்.

தமிளென்பது தமிளம் - த்ரமிளம் - திரமிளம் - திரவிளம் - திரவிடம் - திராவிடம் என வழிவழித்திரிந்தது. "ஸ்ரீத்ரவிடோபநிஷத்" என்பதனால் திரவிளமென்னும் வழக்கிருந்தமை காண்க. ஆரியத்தில் ளகரமில்லாமையால் தமிளென்பதன்திரிபாகிய தமிளம். என்பதே த்ரமிளமாயிற்றென்க.

பாகதர் தமிளோ என்பர். தமிளம் - தமிளோவாயிற்று.

க.	முந்தாள்	—	முந்தாழ் = மூங்கில்.
உ.	விள்	—	விழ் = விழுது.
௩.	தாள்	—	தாழ் = கதவிடுதாழ்.
௪.	சிமிள்	—	சிமிழ்.
௫.	ஆள்வார்	—	ஆழ்வார்.

என்பன போலத் தமிள் என்பது தமிழாயிற்று. இத்தமிழென்னும் வழக்கைத்தான் தொல்காப்பியர் கூறுவர். இவ்வழக்குத்திரமிளமென்னும் வழக்கிற்கு முற்பட்டதாகும்.

தமிலென்னும் வழக்கையேனும் தமிளென்னும் வழக்கையேனும் தொல்காப்பியர் கூறாமையின் அகத்தியர்க்கும் அவ்வழக்கு, காலவியற்கையால் புலப்பட்டில என்க. அவர்கள் காலத்தும் அவ்வழக்கு ஓர்பக்கத்திருந்திருக்கலாம். இக்காலத்தும் புலவர்க்கும் புலப்படாத வழக்குகள் இருக்கின்றன.

"தமிழென் கிளவியு மதனோரற்றே"

"ஆயிடைத்தமிழ் கூறு நல்லுலகத்து"

"செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு"

"செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்தினும்"

"செந்தமிழ்நிலத்து வழக்கொடுசிவணி"

எனத்தொல்காப்பியத்து, அத்தமிழ்வழக்கு வந்திருத்தல் காண்க. இது அகத்தியர்க்கும் மரபியல் வழக்காகும்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் "பொய்யும் வழுவும்" என்னும் சூத்திரவுரையில் இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல்செய்தலின் என நச்சினார்க்கினியர் கூறலின் தமிழென்னும் வழக்கினது தொன்மைபுலப்படல் காண்க.

ஆதியூழியெனினும் முதல்யுகமெனினும் கிரேதாயுகமெனினும் ஒக்கும். ஊழி-யுகம்.

"முட்டின் றொருவ ருடைய பொழுதின்கண்
அட்டிற் றுத்தின்பவாயிரவராபவே
கட்டலர்தார்மார்ப கலியூழிக்காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோவில்" (பழமொழி-எ-அதி.)

என்பதில் கலியூழி என்பது கலியுகமென்னும் பொருள்தரல்காண்க

தாமமுதலியன தமில்—தமிள்—தமிழ் எனத்திரிதல்கூடுமோ வெனின் திராவிடமென்பது = தமிழ்எனத்திரியுங்கால், அது அரிதாகமாட்டாது; அத்திரிபு ஐயுறவில்லா இலக்கணமுறைமையேயாகும்.

இனிமைபுணர்த்தும் தாமம் என்பது தமிழ்எனத்திரிந்து அப்பொருளுணர்த்துதல்போலச் சூரியனையுணர்த்தும் தாமம் என்பது தமிழ்எனத்திரிந்து சூரியனாகிய பொழிலை யுணர்த்திற்று.

இதனால் தமிழென்பதன்திரிபே திராவிட மென்பது உள்ளங்கை நெல்லிக்கனி யாதல் காண்க. கைப்புண்ணுக்குக் கண்ணாடியேன்.

திராவிடமென்பது தமிழெனத்திரிந்த துண்மையாயின், "சிதைந்தனவரினும் இயைந்தன வரையார்" என்பதினுள்ளே தொல்காப்பியர் அடக்கிவிடுவர்.

"தமிழென் கிளவியும் அதனோரற்றே', எனவேறு சூத்திரம் கிளந்து கூறார். அது மிகைபடக் கூறலென்னும் குற்றமுமாம்.

இன்னும் தொல்காப்பியர் கூறிய

"மீனென் கிளவி"

"தாயும் பலகையும்"

"ஆதனும் பூதனும்"
"குயினென் கிளவி"
"எகின்மர மாயின்"
"வண்டும் பெண்டும்"
"தேனென் கிளவி"

முதலிய சூத்திரங்களில் மீன்பலகை முதலியன செந்தமிழ்ச் சொற்களாதல் போலத் தமிழ் என்னுஞ் சொல்லும் செந்தமிழ்ச் சொல்லாயினமையின் "தமிழென்கிளவியு மதனோரற்றே" எனச்சிறப்புச் சூத்திரம் செய்தனர். அம்மீன் முதலியன வடசொல்லாயின் அங்ஙனம் சிறப்புச் சூத்திரம் செய்யார். இது நன்கு ஆழ்ந்து நுணுகிக் கருதற்பாலது.

மின் என்பதில் மீனென்பது பிறந்தது. கருங்கடலில் மின்னென மின்னுவது. மீன்- மீனமாயிற்று. இம்மீன மென்பது வடமொழியில் பழைய நிகண்டுகளிலில்லை. மீன் நட்சத்திரமுமாம்; விட்டு விட்டு ஒளிர்வதென்பது.

பலகம் என்பது பலக- பலகா- பலகையென்றாயிற்று. பலபம்- பலக மென்பதன் திரிபு, பலகையிலெழுதற் குரியதென்பது. அது நிற்க, தொல்காப்பியர்காலத்துத் திரமிளம் திராவிடமென்னுஞ் சொற்கள் இல்லையெனக் கூறுவாருமுளர். உண்டெனக் கூறினும்

"தமிழென் கிளவியு மதனோரற்றே"

எனச் சிறப்புச்சூத்திரம் செய்தமையால் திரமிளம் திராவிடம்- தமிழாயிற்றென்பது அவர் கருத்தாகா தென்பர்.

அவருள் ஒருசாரார் தொல்காப்பியர் காலத்துத் திரமிளம் திராவிடம் என்னுஞ்சொற்கள் உள்ளனவாயின் அவர்க்கும் திரமிள முதலியன தமிழெனத் திரிந்தனவோ என்று ஐயுறவு நிகழக்கூடுமாதலால் "தமிழென் கிளவியு மதனோரற்றே" எனச்சிறப்புச் சூத்திரம் செய்யார் என்பர். நாவினியற்கைக்கு இயைய ழகரத்தின் மேற்றிரிபில்லாமையால் ழகர ஈறுபடநின்ற இத்தமிழென்னும் உச்சரிப்பே உலகத்து நீடுழிநிலை பெறுகிற்கும்.

தே
மேலுனி சாமம் என்பது பொன்னுக்கோர் பெயராதலால் அது தாமமாய், பொன்னின்கண் ஒளி யுண்மையால் ஒளியென்னும் பொருளுணர்த்திற்று. சகரம்- தகரமாகும்.

"சாமவரை வில்லாகச் சந்தித்த வெங்கணை"

என்பது சம்பந்தர் தேவாரம். (திருவாமத்தூர்) இதில் சாமமென்பது பொன்னினை யுணர்த்தல் காண்க. போகரும் கொன்றையைப் பொற்சாம மென்பர். சாமவரை-பொன்மலை.

தீர்ப்புச்செய்யுமாறு.

காண்டலளவையிற் சூரியனினும் சிறந்ததோர்பொருள் எவ்விடத்தும் எக்காலத்தும் இல்லாமையானும் வித்தியாதிபதி சூரியனாகலானும் பல்பொருட்கேற்பின் நல்லது கோடலென்னும் உத்தியால் சூரியனை யுணர்த்தும் தாமமென்னுஞ் சொல்லே தமிழெனத்திரிந்ததெனல் எல்லார்க்கும் ஒப்பத்துணிந்த முடிபுரையாம்.

அநுமான் சூரியனிடத்து இலக்கணங் கற்றமையானும் கலைமகள் கீழ்த்திசையை நோக்கி வீற்றிருக்கின்றமையானும் எல்லாவுயிர்களுக்கும் அவனாலே யுணர்ச்சி யுண்டாகின்றமையானும் சூரியனே வித்தியாதிபதி யென்பது துணிபு.

காண்டலளவையிலிருந்துதான் வித்தை யென்பது உண்டாகின்றது. சூரியன் இல்லையேல் காண்டலளவையும் இல்லையாம். காண்டலளவை—பிரத்தியட்சப் பிரமாணம். தாமமென்பது வடசொலென்று மயங்கற்க. நச்சினார்க்கினியர் காலம் உலகமென்பன வடசொல் அன்று என்பர்.

மாகறல்-கார்த்திகேயமுதலியார்.

NOV

இராமநாதபுரம் சம்ஸ்தானம்

விஜயரகுநாத சேதுபதியவர்கள்பேரில்

மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயர்பாடிய

தளசிங்கமாலை

[இந்நூல், இராமநாதபுர ஸம்ஸ்தானத்தை ஆண்ட ரகுநாத சேதுபதி மேல், மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக்கவிராயர் பாடியது. இந்நூல் இங்கு வந்திருந்த கருங்காலக்குடி குப்புசாமிக்குருக்கள் அவர்கட்குப் பாடமாயிருந்ததை அவர் வாய்ப்படக்கேட்டு எழுதியது; இந்நூலில் அவர்க்குத் தெரிந்திருந்தவை ௨௫-பாடல்களேயாம். இம்மாலையை, சேதுபதி பவனிவரும்போது, சர்க்கரைப் புலவர் சவ்வாதுப்புலவர் முதலியோர் முன்னிலையிற் சிற்றம்பலக் கவிராயர் பாடியது என்பர். இப்பாடல்களிற் கண்ட ரகுநாத சேதுபதி என்பது, சேதுபதிகள் பலர் புனைந்த பெயராயினும், கி. பி. 1647-முதல் 1672-வரை மிக்க திறமையுடன் ஆட்சிசெய்தவரும், புலவர்க்குப் பெருநிதியாய் விளங்கியவரும், பலபெரிய தர்மங்களைச் செய்தவருமாகிய திருமலைச்சேதுபதியாகிய ரகுநாதசேதுபதியைக் குறிக்கின்றதாகவே தோற்றுகிறது. இந்தத் திருமலைச் சேதுபதிபேரிற்றான், பொன்னுங்கால் அமிர்தகவிராயர் ஒருதுறைக் கோவைபாடிப் பரிசுபெற்றது. இக்கோவையில், சேதுபதியைத் தளவாய் புத்திரர் என்றும், தளசிங்கமென்றும், "இராமேசர் பதம் பணியுமையயான்" என்றும் கூறப்படுதல் அச்சேதுபதியின் வரலாறுதல் கண்டுகொள்க. இனி, இத்தளசிங்கமாலையில், "சேதுவிற் சோடசதானஞ் செய்புண்யகுண சாந்தன்" எனவும், "காலி லெட்டன்றலையார் விசயரகுநாத" எனவும், "திருப்புல்லாணிக்கோபுரங் கட்டிவைத்த தனதன்" எனவும், "இராமேசருக்கு முன்மண்டபஞ் செய்தானும்" எனவும், "மனுக்கோடி காத்து மதுரையுங்காத்து" எனவும் வருவனவற்றாலும், ௨௨-ம் பாட்டாலும் அந்தத் திருமலைசேதுபதியையே இம்மாலையும் குறிப்பதென்பது விளங்கும். அச்சேதுபதியின் வரலாறாகச் சொல்லப்படுவன அடியில் வருமாறு:—

சேதுபதியாகிய திருமலைச்சேதுபதி 16..-ஹு முதல்
1672-ஹு வரை:—இவர் வன்சங்கிரியம்மன் கோவில், ஆலையூர்
குருநாதசுவாமிகோவில், மேலச்சிறுபோது மலைவளங்காதலிகோவில்
இராமநாதபுரம் மாரியம்மன்கோவில், தர்ப்பசயனம்கோவில் மண்ட
பங்கள், ஷெயூர் தாயார் சந்நிதி இவைகளையெல்லாம் கட்டியவர்;
தோணித்துறைச்சத்திரம், புத்திரி காதலிநாச்சியாரைக்கொண்டு
எண்பணங்கொண்டான் சத்திரம், கட்டியவர். ருo - தர்மாசனக்கிரா
மங்கள் விட்டவர்; வெளிமுத்தி விடத்திக்குளம் திருச்சுழியல்
கோவில்களுக்கு கிராமங்கள் விட்டுக்கொடுத்தவர்; இராமேசுவரம்,
கோதண்டராமன் சத்திரம், திருச்சுழிபிடாரிசேரிச்சத்திரம், ராமே
சுவரம் அம்மட்டமடஞ்சத்திரம் கட்டினர். திருவாவடுதுறைமடத்
துக்குக் கிராமங்கள் கொடுத்தவர்; மூன்றுபாகமாயிருந்த சம்ஸ்தான
த்தை யொன்றுபடுத்தியவர்; ஒரே நாளில், 25000-படைவீரர்கள்
சேர்த்து 1659-ஹுத்தில் மதுரையின்மீதுபடையெடுத்துவந்த மை
சூராரைச்செயித்து திண்டுக்கல்வரை யோட்டி யடித்தார். இதற்
காக திருமலைச்சேதுபதி யென்று பட்டமும், தாலிக்குவேலி யென்
னும் பட்டமும் சிங்கமுகப்பல்லக்கும், கப்பம் கட்டாத சுவய அர
சும், திருப்பூவணம் திருச்சுழியல் பள்ளிமடம்- இம்மூன்று கிராமங்
களின் சர்வசுவதந்திர பாத்தியமும் பெற்றவர். சமாசிரயணம் பெ
ற்றவர். தெலுங்குபாஷையை சம்ஸ்தான நடவடிக்கைகளில் உப
யோகப்படுத்தும்படி செய்தவர். விரையாத கண்டனில், அடிக்கடி
வசித்தவர்; பாண்டிய னிடமிருந்து .... த்தைப்பெற்றவர்; நவ
ராத்திரி உற்சவம் ஆரம்பித்தவர்; ராஜராஜேசுவரி ஆராதனத்துக்
காக இராமேசுவரம் சங்கரய்யருக்குப் பட்டயத்தின்மூலம் மிராசு
ஏற்படுத்தியவர். சம்ஸ்தானமுகரில் தெலுங்கு அக்ஷரம் ஏற்படுத்தி
யவர்; குடும்கானைஜெயித்து அரசுகிலைப்பாட்டாவென்னும் பட்டம்
பெற்றவர். எட்டயபுரம் முதலிய பாளையக்காரர்கள் பாண்டியனை
யெதிர்க்கும்போது அவர்களையெல்லாம் அடக்கி "சுவாமிதுரோகி
கள் முண்டன்" என்னும் பட்டமும் சுவாமிதுரோகி வண்டயமும்
அவ்வண்டையத்தில் எட்டையன் தலையுஞ்செய்து வைக்கப்பெற்ற
வர்; இதற்காகத் திருநெல்வேலியிலிருக்கும் வண்ணார்கோவில் மாகா
ணமும், திருநெல்வேலிக்கரையோரத்திலுள்ள முத்துச்சலாபமேற்

பார்வையும் பெற்றவர்; ராமயப்பய்யன் ஆணையோரா[illegible]ங்கள் ஏற்படுத்தி பாம்பன் ஆற்றைத் தோணிகளில் கடக்கவேண்டிய காலம் நேர்ந்ததால் அதற்குவேண்டியசவுகரியங்கள் ஏற்படுத்தி அது பற்றி இராமேசுவரத்தையாவென்று பெயர்பெற்றவர். சொக்கலிங்க நாயகரிடம் ரத்னகிரீடம்பெற்றவர்; இராமேசுவரத்துக்குப் பத்துலக்ஷத்துக்குமேல் செலவுசெய்து ஹிரண்யகர்ப்பயாகம்செய்து அது பற்றி ஹிரண்யகர்ப்பயாஜியென்று பெயர்பெற்றவர். ஒருதுறைக் கோவைக்குப் பொன்னாற்செய்த தேங்காய்கள் 400—கொடுத்தவர்; வசூரிகண்டகாலத்தில் பிரத்தியக்ஷதேவி அநுக்கிரகம் பெற்றுசவுக்கியமானதால் மாரியம்மன்கோவிலைக் கட்டினவர்; கனவில் ஸ்ரீராமன் வந்து உத்தரவுசெய்தபடி தர்ப்பசயனத்தில் ஸ்ரீராமன் உத்ஸவம்ஏற்படுத்தி தேர்நிலைக்குவந்ததும் தேர்முன்பாகவே, தர்ப்பசயனத்தில் அடங்கியவர்."

நூல்.

திருமேவு பாற்கடல் சூழவின் னோங்கித் திசைவிளங்கும்
பருமேரு சேர்கருங் காக நிறம்பொன் படைத்ததொப்பாய்
வருமே யுனையடுத் தார்க்கெந்த நாளும் வளர்ந்தசெல்வந்
தருமே விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧)

மனநாளு மொத்துத் தருமமுன் போற்செய்யின் மாநிலமேற்
கனநாளு மோங்கி வளருங்கண் டாய்கல்வி சேர்தருவிற்
பனநாக ரீக முகுந்தாசங் காழி படைத்தரிகே
தனனும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௨)

சிவனார்தம் பூசை சிவாலயம் யாகமும் செய்பவரு
மவனு மாசர்க் காசனைப் போலநின் தார்செய்குவார்
புவனுதி வாழ விலங்கேசன் மடமுன் போர்புரிமா
தவனும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௩)

காட்சிக் கெளியவுன் போன்மன்னர் செய்வதைக் கண்டொருவர்
மாட்சியின் றாகத் தடுத்தால் வருங்குறை மாவலிபாற்
சூட்டிய தன்றெனச் சொல்லித் தடுத்திடுஞ் சுக்கிரன்கண்
சாட்சி விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௪)

தேனார் மொழிமட மாதர்சந் தானம்பொன் சேருங்கல்வி
மேனா டவமுனைப் போற்செய்த வர்க்குண்டு வீணர்க்குண்டோ
வானா டரும்பணி ராமே சருக்குமுன் மண்டபஞ்செய்
தானும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (ரு)

தூபமுண் டாகிற் றழலுமுண் டாமெனச் சொல்வதுபோற்
கோபமுண் டாமெனிற் பாபமுண் டாமென்று கூறுவர்காண்
மாபங் கயரவி போலே திகாந்த மருவுபிர
தாப விசய ரகுநாத சேது தளசிங்கமே. (சு)

பரமா மெனவந் தடைந்தோரைக் காத்துப் பரிவுசெய்யும்
திரமான தெய்வமுன் போன்மன்னர் காண்கற்பின் சேயிழைதன்
வரனாகுந் தெய்வப் புலவோர்கள் போற்ற மகிழ்ந்தபுரந்
தரனும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (எ)

என தன்ம மாகினுந் தான்கற்ப கால மிருக்கவும்போல்
மனதில் நினைந்த படிசெய்ய யார்க்கும் வராதுகண்டாய்
கனதன மால்திருப் புல்லாணிக் கோபுரங் கட்டிவைத்த
தனதன் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (அ)

போற்றும் பசிக்கிடு கூழமு தாம்பசி போகில்விண்ணிற்
றோற்று மமுதுங் கசப்பாகுங் காண்டொடு வாளிமுனை
மாற்றி யரக்கன் முகம்பார்த்து நாளைக்கு வாவெனவே
சாற்றும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (கூ)

சேரும் பருவத்திற் சேரா மன் பாதரைத் தேடிப்புலன்
சோரும் பருவ நினைந்தாவ தென்ன சுகம்வருமோ
பாரும்வெம் போரி லருச்சுனன் றேர்விடு பாகனெனச்
சாரும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (க0)

பெருக்கான செல்வந் தராுத வாதவர் பின்னைமுள்ளின்
முருக்கா மலரையொப் பாவர்கண் டாய்முல்லை மாலையுட
னருக்காணி முத்தணி மார்பா கமலத் தமருமென்மா
தருக்காம் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (கக)

தேந்தருஞ் செந்தமிழ் மாலைகல் லாரிடஞ் சேர்த்தலர்ந்த
மாந்தரு மேவுங் கவிக்கொப் புறுத்திரு மாலைகண்டாய்
போந்தன சேதுவிற் சோடச தானஞ்செய் புண்யகுண
சாந்த விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௨)

சிலையா மெழுத்துஞ் சகாயமுஞ் சீர்த்தியுஞ் செந்தமிழும்
நிலையாகு மன்னர்சொல் வார்த்தையு மென்றைக்குநிற்குங்கண்டாய்
கலையாருங் கானில்வன் கல்லைப்பெண் ணாக்கிய காலிலெட்டன்
றலையார் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௩)

அவிழு மலர்முகத் துற்றிடு நோயை யறிந்துமுன்னே
திவழுங்கண் ணாடி யுடைப்ப தறிவின் சிறுமையன்றோ
கவிழுங் கடாம்பொழி மால்யானை யாய்கமழ் பூமருதிற்
றவழும் விசைய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௪)

நடக்கையி லேவரும் புல்லர் குணமுப்புன் னையின்றன்வால்
முடக்கையெப் போதினுந் தீர்க்கத் தகாத முறைமைகண்டாய்
இடக்கை முடக்கித் துயர்கூரும் வேதியர்க் கென்றுஞ்செய்யுந்
தடக்கை விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௫)

மருவும் மணமு மெனவுமுன் போல்வரு மன்னருக்கே
திருவுந் திறமுமுண் டாகுங்கண் டாய்செக ராசர்நித்தம்
வெருவும் படிக்கம ராடத் தளங்கொண்டு மேல்வலியச்
சருவும் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௬)

கடிந்தவர் தம்முடி மேலே நடித்தவுன் காலதனால்
முடிந்ததை யாவர்கை யாலவிழ்ப் பார்முடி யாதசுரர்
விடிந்திர வென்ன விராவணன் போரிடை வீழவம்பாற்
றடிந்த விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௭)

பிரச மலரிற்செந் தேனுண்ணும் வண்டெனப் பெண்கள்மனத்
திரசம் வரச்செய்து சேர்ந்தாற் றருஞ்சுக மில்லையெனில்
விரசம தாகுமெந் நாளு மமுதம் விளங்குகுண
சரச விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௮)

இனத்தாலு மெள்ள வவர்சினைந் தீரத் திரிந்துதங்க
ளினத்தாரைச் சேர்வ தியற்கையன் றேவென்று மேநிறைந்த
வனத்தா மரைமலர் போன்முகத் தாய்வளஞ் சேர்கந்தமா
தனத்தாய் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௧௯)

நன்மைசெய் தேதம்மை வந்தே யடுத்திடும் நல்லவர்பால்
வன்மைசெய் வாருக்குத் தீமைமென் மேலும் வளருங்கண்டாய்
புன்மைசெய் தாருக்கு நன்மைசெய் தென்றும் புரப்பதுவுன்
றன்மை விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௨௰)

கண்டக ரெத்தனை சொன்னாலு மென்கசப் பாஞ்சுரைக்காய்
கொண்டபல் காயநெய் கூட்டிச் சமைக்கிற் குணம்வருமோ
விண்டருஞ் சீர்த்தித் துரியோ தனன்சமர் வென்றருளுந்
தண்டன் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௨௧)

பானையும் பாலையும் வேற்றுமை யோர்த்துளி பண்ணுதல்போல்
யானையின் மன்னர் குணம்வேற தாக்குவ ரற்பர்கண்டாய்
கானையி னீசர் பதம்போற்றி யேத்தியெக் காலும்வளர்
தானை விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௨௨)

பெரியாரைச் சொல்வ தறிந்துசொல் லாமற் பெருஞ்செருக்காற்
பரியாக மாதிசெய் தோர்மன்னன் பாம்பெனப் பாரினுற்றான்
மரியாதை ராம விரணியன் மார்பை வகிர்ந்தருள்கே
சரியாம் விசய ரகுநாத சேது தளசிங்கமே. (௨௩)

முனைக்கோடி யாக வருமரு வாரை முறியவெட்டிப்
பிணுக்கோடச் செய்தள நாம விசைய ப்ராதபமிகும்
மனுக்கோடி காத்து மதுரையுங் காத்து வளருந்தெய்வத்
தனுக்கோடி காத்தவ னேரகு நாத தளசிங்கமே. (௨௪)

ஞாயிறு போய்விழத் திங்கள்வந் தெய்திட நண்ணியசெவ்
வாயனல் வீசப் புதனம்பு தூவநல் வியாழன்வர
வேயுறு வெள்ளி வளைசோர யானுனை மேவுதற்குத்
தாய்சனி யாகினளே ரகுநாத தளசிங்கமே. (௨௫)

புத்தகக்குறிப்பு.

கைசிக ஏகாதசிபுராணம்:—இப்பெயர்கொண்டதொரு நூல், சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-க. வே. திருவேங்கடநாயடு அவர்களால் தமிழ்ப்பாவினத்தில் இயற்றி வெளியிடப்பட்டுளது. திவ்ய தேசங்களில் ஒன்றான "திருக்குறுங்குடி என்னுந் திருப்பதியில் அந்திய குலத்தி லுதித்து எம்பெருமானுக்கு இசைத்தொண்டினை இயற்றிவந்த நம்பாடுவார் என்னும் பரமபாகவதோத்தமரைப் பக்ஷித்தல்கருதிக் கைப்பற்றிய ஓர் பிரமராக்கதனுக்கு, தாம் திருமாலைக்குறித்துப் பாடிய பச்சிமம் என்னும் பண்ணில், கைசிகமென்னும் ஒருஸ்வரத்தின் பலனை ஏகாதேசியிலீந்து அவனை யீடேற்றித் தாமும் அதனானே பரமபதமடைந்தமையை விளக்கலின் அவ்விசைகாரணமாக இப்பெயர்போந்தது." "இளைப்பு விடாய்தீர்த்தேனே, நம்பாடுவாரைப் போலே" என்றுமுற்காலத்துப் பெரியோரே நம்பாடுவார் பெருமையைப்பற்றி உருகாநிற்பர்; இச்சரித்திரத்தை, ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த வியாக்கியானத்தைததழுவி நாயடுஅவர்கள் பாடியுள்ளார்கள். ஸ்ரீபட்டர்வியாக்கியானசங்கிரகமும் ஏகாதசிகளின் மான்மியங்களடங்கிய நீண்டமுகவுரையும் இந்நூன்முகப்பில் அமைக்கப்பட்டிருத்தல், படிப்போர்க்குப் பெரும்பயனைத்தரவல்லன. இனி, நாயடுஅவர்கள், புராணப்பொருளைச் செய்யுள்வடிவில்வைத்து மிகவழகாக விளக்கிச்செல்வது நம்மவராற் புகழ்தற்குரியது, அவர்கள் வாக்கு ஒழுகியவோசையும் விழுமிய பொருளுமுடைத்தாயிருத்தலோடு, அவர்களது சமயவுணர்ச்சியையும் ஆழ்ந்த பத்திநிலையையும் நன்குகாட்டுகின்றன. பிரசித்த ஏகாதசிகளுள் ஒன்றான கைசிகவேகாதசிமான்மியத்தை மிகநன்றாகவுணர்த்தும் இந்நூலை வைஷ்ணவாபிமானிகள் யாவரும்பெற்றுப் படித்து மகிழ்தல் இன்றியிமையாதது. இதன்விலையணா நான்கே. விலாசம்—"எஸ். மூர்த்தி அண்டு கோ—305. தம்புசெட்டி வீதி, சென்னை" என்பது,—பத்திராசிரியர்

[மற்றவர்கள் அனுப்பிய நூல்களைப்பற்றி அடுத்தமுறை குறிப்பு வெளிப்படும்.]